# அச்சாரம்

# ACCHARAM

பல்சுவை மாத இதழ்
Tamil Monthly


மலர் - 8 | இதழ் -9 | ஏப்ரல் 2024 | விலை ரூ.15/-

Volume - 8 | Issue -9 | April 2024 | Price Rs.15/-





KV
VHAGAI MOVIES
RVB
PRESENTS
GK FOCUS PRODUCTION
RELEASED BY
YSY
STUDIOS
COMING SOON
ஆள் இல்லாதவனுக்கு ஆண்டவனே துணை
U/A
WRITTEN & DIRECTION R VENGAT BHUVAN
MUSIC PRITHVY CINEMATOGRAPHER MANI RAJU EDITING & DI NAVEENKUMAR
ART DIRECTOR SURENDRAN CHOREOGRAPHER POWER SHIVA STUNTS SENSAI JESU MAKEUP R GANAPATHY
MANAGER HENDRY KUMAR SOUND DESIGN GODWIN DESIGNS & VFX DHANASEKAR
PRODUCERS- KRISHNA KUMAR M / R VENGAT BHUVAN / DIWAN

# ஆசிரியர் பக்கம்

# அச்சாரம்

மலர் - 08 இதழ் -9 ஏப்ரல் 2024

வெளியீட்டாளர் – ஆசிரியர்
**M.C.சேகர் B.E.,**

**நிர்வாக ஆசிரியர் V.செந்தில்குமார்**

இணை ஆசிரியர்கள்
**P.ரஞ்சித்குமார்**, பாலகுமார்சோமு, ,
**R.துரை B.E.,**
**R.சிவா M.Tech., சே.உமா,**
**தமிழ் ஆப்தன் (தினேஷ்)**

துணை ஆசிரியர்கள்
**T.மதுராஜ்**, A. NANDAN
**R.சரண்குமார் B.E., A.E.SELVAM**
**A.K.MUTHU, SP.SELVAKUMAR**

கௌரவ ஆசிரியர்
**N.வெங்கடேசன் PSK Travels**
**M.SIVAKUMAR**

பொறுப்பாசிரியர்
**M.திரவியப்பாண்டியன் M.A., L.L.B.,**

சிறப்பாசிரியர்
**T.அன்பழகன்,**

முதன்மை நிருபர் – ஆலோசகர்
**பாப்பனப்பட்டு வ.முருகன்**

**நிருபர்கள்**
A.சரவணன்

**B.P.முன்னா**

புகைப்படக் கலைஞர்
**K.சுரேஷ் B.Tech.,**

சட்ட ஆலோசகர்கள்
**K.செந்தூரபாண்டி B.Sc.,B.L.,**
**C.காசிவிஸ்வநாதன் B.Sc., B.L.,**
**P.பாலசுப்பிரமணியம் B.A., B.L.,**

வடிவமைப்பு:
*4 மீடியா டிசைன்ஸ்* @ 7871696917



SF1, 2nd Floor, 5/10, Anna Colony,
Virugambakkam, Chennai - 600 092.
**Cell: 9444153340**
E-mail: accharam2016@gmail.com




**அனைத்து வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், விளம்பரம் கொடுத்து உதவிக்கொண்டு வருபவர்களுக்கும் முதல் வணக்கம். ஏப்ரல் 1ல் வெளிவரும் அச்சாரம் 8ஆம் ஆண்டின் 9ஆம் இதழை உங்கள் ஆதரவோடு தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன். எனது வேண்டுகோளுக்கு இணங்க வாசகர்கள் சந்தாவை செக்காக அனுப்பியது மட்டுமில்லாமல் சந்தா தொகையினை வங்கியிலும் கட்டி ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதற்கு முதற்கண் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**தொடர்ந்து உங்கள் ஆதரவை நல்கும்...**

**M.C.சேகர்** B.E., *ஆசிரியர்*
*செல்:* **9444153340**



# இராசுக்குட்டி பதில்கள்

வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை எவை?

-வீர.கோகுலன், தி.மலை

திருமணமான பெண் ஒருத்தி, தன் தாயாரைத் தேடி வந்தாள். அவளுடைய முகம் வருத்தமுற்றிருந்தது. கண்கள் கலங்கியிருந்தன.

தாயார், தன் மகளைப் பார்த்து, “என்ன விஷயம்?“ என்று விசாரித்தார். மகள், தன்னுடைய கஷ்‘டங்களை எல்லாம், ஒவ்வொன்றாகக் கூறினாள்.

இவற்றிலிருந்து எப்படி விடுபடப் போகிறேன் என்று தெரியவில்லை என்று கூறி, அழுதாள்.

அவற்றை எல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்ட தாயார், தன் மகளை சமையலறைக்கு அழைத்துச் சென்றார். மூன்று பாத்திரங்களில் தண்ணீரை ஊற்றி, எரியும் அடுப்பிலே அதையெல்லாம் எடுத்து வைத்தார்.

சிறிது நேரத்தில் தண்ணீர் கொதிக்க ஆரம்பித்தது. ஒரு பாத்திரத்தில், கேரட்டை எடுத்துப் போட்டார். மற்றொரு பாத்திரத்தில், முட்டையைப் போட்டார். இன்னொரு பாத்திரத்தில், கொஞ்சம் காபித் தூளைப் போட்டார்.

அந்தப் பெண்ணுக்கு எதுவும் புரியவில்லை. இருந்தாலும் அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில், அந்தப் பாத்திரங்களை கீழே இறக்கி வைத்தார், தாயார். கேரட்டையும், முட்டையையும் எடுத்து வெளியே வைத்தார். காபியையும் ஒரு கோப்பையிலே ஊற்றினார்.

“மகளே... இதெல்லாம் என்ன என்று தெரிகிறதா?“ என்று கேட்டார், தாயார். அதற்கு, “அது கேரட், அடுத்தது முட்டை, இது காபி“ என்று கூறினாள், மகள்.

“சரி... கேரட்டைத் தொட்டுப் பார்... எப்படியிருக்கு?“ என்று கேட்டார், தாயார். தொட்டுப் பார்த்து, “ரொம்ப



மென்மையாக இருக்கு“ என்று கூறினாள், மகள்.

“முட்டையைத் தொட்டுப் பார்த்து, எப்படியிருக்கு என்று சொல்“ என்று கூறினார், தாயார். “கொஞ்சம் கடினமாக இருக்கிறது“ என்று சொன்னாள், மகள்.

“அடுத்தபடியாக, காபியை எடுத்துக் குடி“ என்றார், தாயார். காபியைக் குடித்துவிட்டு, “ரொம்ப சுவையாக இருக்கிறது“ என்று கூறினாள், மகள்.

“எதற்கு இந்த வேடிக்கை?“ என்று தாயிடம் கேட்டாள், மகள்.

அதற்கு பதில் அளித்த தாய், “மகளே... கொஞ்ச நேரத்திற்கு முன்பு, இந்த மூன்று பொருள்களையும் ஒரே மாதிரி தண்ணீரில் தான் கொதிக்க வைத்தோம். ஒரே நேரத்தில் கீழே இறக்கி வைத்தோம். ஆனால், ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது. இந்தக் கேரட் ஆரம்பத்திலே எவ்வளவு கடினமாக இருந்தது? ஆனால், தண்ணீரில் கொதிக்க வைத்தவுடன், தன்னுடைய இயல்புக்கு நேர்மாறாக மென்மையானதாக மாறிவிட்டது. இந்த முட்டைக்குள்ளே, திரவ நிலையிலே இருந்த கரு, கொதிக்க வைத்ததும் கடினமாக ஆகிவிட்டது. காபியைப் பார். அது, அந்த தண்ணீரையே சுவை மிக்க பானமாக மாற்றிவிட்டது.

“மகளே... வாழ்க்கையில் க்‘டங்கள் என்பது,

இப்படி கொதிக்க வைக்கிற மாதிரி தான். இதை நாம் எந்த ரூபத்தில் சந்திக்கப் போகிறோம் என்பதில் தான் வி'யமே இருக்கிறது...“ என்று கூறினார், தாய்.

உடனே மகள் முகத்தில், தெளிவு பி-றந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். கவலை மறந்து போய்விட்டது. துக்கம் பறந்து போய்விட்டது. மனதில் அமைதி தவழ்ந்தது.

எந்த நிலைமையையும் சந்திப்பதற்கு, சமாளிப்பதற்கு உரிய துணிச்சல், மன உறுதி இருந்தால், வெற்றி நிச்சயம். இவை இரண்டும் தான், வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவையும் கூட.

ஒருவருக்கொருவர் பார்க்கும் பார்வை வேறுபடும் என்பதை, உதாரணத்தோடு விளக்க முடியுமா?
-த.ஆதிலட்சுமி, வளவனூர்

ஒரு குருவும், அவரது சீடர்களும், கடலோரம் அலைகள் கரையில் மோதிச் சிதறும் காட்சியைக் காண்கிறார்கள்.

முதலாவது சீடனைப் பார்த்து, குரு கேட்டார், “உனக்கு என்ன தெரிகிறது?“ என்று.

அதற்கு அவன், “திரும்பத் திரும்ப வந்து மோதும், அலைகளில் விடாமுயற்சி தெரிகிறது...“ என்றான்.

அடுத்த சீடனிடம் அதே கேள்வியைக் கேட்ட போது, அவன் சொன்னான், “துன்பங்கள் தொடர்ந்து வந்தாலும், கரையைப் போல் உறுதியாக நின்றால், எல்லா துன்பங்களும் சிதறிப் போகும் என்பது தெரிகிறது...“ என்றான்.

குரு சொன்னார், “இருவர் பார்த்த காட்சிகள் ஒன்றே என்றாலும், இருவரின் பார்வையும் வெவ்வேறு. அது தவறில்லை. சில நேரங்களில் அலைகளாய் இருங்கள்ளூ சில நேரங்களில் கரையாய் இருங்கள்“ என்று.

கடவுள், மதங்கள் பெயரில், பூசல்கள் நிகழ்வது சரியா?
-இரா.கிருஷ்'ணன், திண்டிவனம்

இதுக்கு நான் பதில் சொல்றதை விட, முகநூலில் ஒரு ஆசிரியை கூறியிருப்பதைப் பாருங்க...

“தெய்வ நம்பிக்கை என்பது, ஒரு பற்றுக்கோல். யாரிடமாவது தஞ்சமடைய மனம் ஏங்கும் தருணத்தில், தன்முனைப்பின் உறுத்தல் இன்றிச் சரணடைய ஏதுவான இடம்.

“அதை நம் விருப்பப்படி எல்லாம் சித்தரித்து வணங்கிக் கொள்கிறோம். நம்மைப் பொறுத்தவரை, நம் குறைகளை, தவறுகளை எதிர்க் கேள்விகள் கேட்காது, அப்படியே கேட்டுக் கொண்டிருக்க, செவிகள் தேவை. அவை, நாம் சித்தரித்த செவிகள் எனில், நாம் மனந்திறக்க வசதியாக இருக்கும்.

“நம் குறைகளைக் கேட்பதற்கு, நம் இழிவுகளைப் பேசாமல் ஏற்றுக் கொள்வதற்கு, நமக்கென்று நாம் படைத்ததை, கடவுள் என்று கூறலாம் தானே?

“இதைத் தாண்டியும், இன்னும் நமக்குள் பேதம் பார்க்கவும், பிரித்துப் பேசவும், சண்டை போடவும் என்ன இருக்கிறது? சக மனிதனுக்காக இரங்கும் மனமே, கடவுள். சக மனிதனுக்கு உதவும் கரமே, கடவுளின் கரம். உள் கடந்து, எவ்வுயிர்க்கும் கருணை செய்யும் உள்ளமே, கட உள்!“

வாழ்க்கைக்குப் பயன்படும், ஒரு நல்ல அறிவுரை கூறுங்களேன்...
-வீ.முகிலன், செஞ்சி

ஒரு அப்பாவும் மகனும், அப்பாவின் நண்பர் ஒருவர் வீட்டிற்கு, விருந்திற்குச் செல்கிறார்கள்.
விருந்திற்கு முன்பாக தேநீர் வழங்கப்படுகிறது. அப்பா கையில் எடுப்பதற்கு முன்பு, தேநீர்க் கோப்பை தவறி கீழே விழுந்து உடைந்து விடுகின்றது.
அந்தச் சப்தம் கேட்டு, நண்பர் வெளியே வந்து, அதைப் பார்த்து, “அழகான சீனக் கோப்பை இது. எவ்வாறு உடைந்தது?“ என, ஆதங்கமாகக் கேட்கிறார்.
“எனது கை தவறி கீழே விழுந்து உடைந்து விட்டது“ என, அப்பா வருத்தமான குரலில் சொல்லவே, உடைந்த பீங்கான்களை, நண்பர் அள்ளிக் கொண்டு செல்கிறார்.

இதைக் கண்ட மகன், அப்பாவிடம் கேட்கிறான், "உங்கள் கை, கோப்பையில் படவே இல்லையே... பின் ஏன், நீங்கள் செய்யாத குற்றத்தை ஒப்புக்கொண்டீர்கள்?" என்று.

"உண்மைதான். தேநீர்க் கோப்பையைக் கொண்டுவந்து வைத்தது, நண்பரின் மகள். அவள் கவனமாக மேஜைமீது அதை வைக்கவில்லை. ஆகவே தவறி விழுந்து விட்டது. இந்த உண்மையைச் சொன்னால், நண்பர் ஏற்றுக் கொள்வாரா? நிச்சயம் என் மீது சந்தேகப்படவே செய்வார். அதற்குப் பதிலாக, செய்யாத குற்றத்தை ஏற்றுக் கொண்டுவிடுவதே சரி என நினைத்தேன்.

"ஒருவேளை, நடந்த உண்மைக்கு, உன்னை சாட்சியாக வைத்து, விளக்கிச் சொல்லியிருந்தால், அவர் மகளைக் கோபித்துக் கொண்டிருப்பார். அதன்பிறகு, அவரது மகளுக்கு என்னைப் பிடிக்காமல் போய்விடும். மெல்ல எங்கள் நட்பில் விரிசல் ஏற்பட்டுவிடும். உறவுகளை உடைபடாமல் காப்பாற்ற, இப்படி சிறு பொய்கள் தேவைப்படவே செய்கின்றன" என்றார்.

அப்பாவின், முப்பது ஆண்டுகால அனுபவம் தான், அவரை இந்த முடிவு எடுக்க செய்திருக்கிறது.

வாழ்க்கை நமக்கு கற்றுத் தரும் பாடம், இது போன்றது தான். இதற்கு மாறாக, சிலர் தங்களது சுயநலத்திற்காக, குடும்ப உறவுகளைச் சிதைத்துக் கொள்வதுடன், மற்றவர்களின் சந்தோஷத்தையும் கெடுத்து விடுகிறார்கள்.

உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது எளிதுளூ காப்பாற்றிக்கொள்வது எளிதல்ல. விட்டுக் கொடுத்தலும், புரிதலும், அரவணைத்துப் போதலும், உறவுகள் நிலைக்க அவசியம்.

மனிதர் செய்யும், ஆனால் தவிர்க்க வேண்டிய, ஒரு தவறைக் கூற முடியுமா?

-மூ.கோபி, புதுக்கோட்டை

ஓர் அரசர் இருந்தார். அவரிடம் பத்து காட்டு நாய்கள் இருந்தன. தவறு செய்யும் தனது ஊழியர்களை, அந்த காட்டுநாய்களுக்கு இரையாக்குவார்.

ஒருநாள், வேலைக்காரர்களில் ஒருவர், தவறான ஒரு கருத்தைச் சொன்னார். அரசருக்குக் கோபம் வந்துவிட்டது.

"இவனை நாய்களுக்குத் தூக்கி எறியுங்கள்..." என்று கட்டளையிட்டார்.

வேலைக்காரன் கெஞ்சினான், "நான் உங்களுக்கு, பத்து வருடங்களாக சேவை செய்கிறேன்... நீங்கள் இப்படி ஒரு தண்டனையை எனக்குத் தரலாமா? தயவுசெய்து என்னை அந்த நாய்களுக்குத் தூக்கி எறிவதற்கு முன், பத்து நாட்கள் அவகாசம் தாருங்கள்..." என்று.

அரசர், ஒப்புக் கொண்டார்.

அந்த பத்து நாட்களில், வேலைக்காரன், நாய்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் காவலரிடம் சென்று, அடுத்த பத்து நாட்களுக்கும், தான் அந்த நாய்களுக்கு சேவை செய்ய விரும்புவதாகக் கூறினான்.

காவலர் குழப்பமடைந்தார். ஆனாலும் ஒப்புக் கொண்டார்.

வேலைக்காரன், அந்த நாய்களுக்கு உணவளித்தான், அவற்றைச் சுத்தம் செய்தான், குளிப்பாட்டவும் தொடங்கினான். அவற்றிற்கு, அனைத்து விதமான வசதிகளையும் வழங்கி, அன்பு காட்டினான்.

பத்து நாட்கள் முடிந்தன. வேலைக்காரனைத் தண்டிப்பதற்காக, நாய்களிடம் தூக்கி எறியும்படி அரசர் உத்தரவிட்டார்.

அவன் தூக்கி எறியப்பட்டபோது, அவை ஓடிவந்து, அவன் கால்களை நக்கத் தொடங்கின.

அதைக் கண்டு, அனைவரும் வியந்தனர்.

அதைப் பார்த்து திகைத்த அரசன், "என் நாய்களுக்கு என்ன நேர்ந்தது?" என்றா ர்.

வேலைக்காரன் பதிலளித்தான். "நான், பத்து நாட்களுக்கு மட்டுமே இந்த நாய்களுக்கு சேவை செய்தேன்... அவை, என் சேவையை மறக்கவில்லை. ஆனால், உங்களுக்கு நான், பத்து வருடங்கள் சேவை செய்தும், என் முதல் தவறைக் கூட மன்னிக்காமல், நான் உங்களுக்கு செய்த சேவை அனைத்தையும் மறந்து, என்னைத் தண்டிக்க உத்தரவிட்டது சரியா?" என்றான்.

அரசர், தனது தவறை உணர்ந்து, வேலைக்காரனை விடுவிக்க உத்தரவிட்டார்.

நம்மிலும் எத்தனையோ பேர், இப்படி இருக்கிறோம். ஒருவர் செய்த ஒரு தவறுக்காக, அவர் நமக்குச் செய்த உதவிகளை எல்லாம் மறந்து, அவரை வாழ்நாளெல்லாம் ஒதுக்கி வாழ்கிறோம். அது தவறு.


# சாமானியன் உங்க கதையா?

சிவா கோயம்புத்தூர்

ஆம். நான் கொரோனா காலத்திற்கு முன் வச்சக்குறி தப்பாது என்ற பெயரில் கதை எழுதி முடித்து கதைக்கான டைட்டிலை தென்னிந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தயாரிப்பாளர்கள் சங்கத்தில் 21-3-2020 அன்று பதிவு செய்தேன். இந்த கதை உருவாக்கத்தில் உசிலை எம்.சிவக்குமார் இயக்குநர் அன்பரசன், மற்றும் சேகர் ஆகியோர் என்னுடன் இருந்தனர். இந்த கதைக்கு என் நண்பரின் மகன் கௌசிக் என்பவரை இசையமைப்பாளராகவும், மணி அமுதவன், நந்துதாசன் மற்றும் நானும் சேர்ந்து 4 பாடல்களை உருவாக்கினோம். இந்த படத்தின் கதைக்கு கதாநாயகனாக கௌசிக் அவர்களுக்கு இயக்குநர் காக்காமுட்டை மணிகண்டன் ஆபிஸ்க்கு வரவழைத்து கதை சொன்னேன். நான் கதை சொல்லும் போது கதாநாயகனின் அப்பா, தம்பி, உசிலை சிவக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

படத்திற்கு எனது சொந்த ஊரான கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உள்ள வெள்ளிமலை, கருமந்துறை, கச்சிராயபாளையம், கோமுகி டேம் போன்ற இடங்களை படப்பிடிப்புக்காக தேர்வு செய்தோம். இப்படி படப்பிடிப்பிற்கான வேலை பிளான் செய்து கோண்டிருந்த போது கொரோனா காலம் வந்ததால் கொரோனா காலம் முடியட்டும் என்று காத்திருந்தேன்.

இந்த சமயத்தில் வச்சக்குறி தப்பாது என்ற எனது கதையின் டைட்டிலை விஜய் டிவி பயன் படுத்தியதால் படத்தின் கதைக்கு சிண்டிகேட் என்று பெயர் மாற்றினேன். தென்னிந்திய திரைப்பட எழுத்தார்கள் சங்கத்தில் கதையையும் பதிவு செய்துள்ளேன். மெயிலிலும் வச்சக்குறி தப்பாது என்ற பெயரில் கதை உள்ளது. நான் படப்பிடிப்புக்கு ஆயுத்தாகும் சூழ்நிலையில் எனக்கு சாமானியன் படத்தின் ஷீட்டிங் ஸ்பாட் வீடியோ பார்க்கும் சூழ்நிலை ஏற்பட்டது. அந்த வீடியோவில் உள்ள நடித்தவர்கள் கொடுத்த பேட்டியை பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். அந்த பேட்டியின் மூலம் என் கதை திருடப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து அந்த படத்தில் உதவி இயக்குநர் பிரிவில் வேலை செய்தவரிடம் விசாரித்த போது என் கதையும் சாமானியன் படத்தின் கதையும் ஒன்று என தெரிந்து கொண்டேன்.




உடனடியாக நான் கதை பதிவு செய்திருந்த தென்னிந்திய திரைப்பட தாளர்கள் சங்கத்தில் புகார் கொடுத்தேன். தென்னிந்திய திரைப்பட எழுத்தாளர்கள் சங்கத்தலைவர் திரு.கே.பாக்யராஜ் அவர்கள் சாமானியன் திரைப்படத்தில் கதாநாயகனாக நடிக்கும் திரு.ராமராஜன் அவர்களிடம் ஒரு மாதங்களாக பேசினார். திரு.ராமராஜன் அவர்கள் கதை பிரச்சினை பற்றி ஒரு மாதங்களாக தலைவர் திரு.கே.பாக்யராஜ் அவர்களிடம் பேசி வந்தவர், ஒரு மாதம் கழித்து இந்த படத்தில் நான் நடிகன் மட்டுமே நீங்கள் படத்தின் தயாரிப்பாளரிடம் பேசிக் கொள்ளுங்கள் என்று அவாய்ட் செய்து விட்டார்.

தலைவர் திரு.கே.பாக்யராஜ் அவர்கள் சுமுகமான உடன்பாடு ஏற்படாததால் முறையாக தென்னிந்திய திரைப்பட எழுத்தாளர்கள் சங்கத்தின் மூலம் திரு.ராமராஜன் அவர்களுக்கு கதை புகார் குறித்து கடிதம் அனுப்பப்பட்டது. அந்த கடிதத்தை திரு.ராமராஜன் அவர்கள் வாங்காமல் திருப்பி அனுப்பினார். இதன் பிறகு தலைவர் திரு.கே.பாக்யராஜ்

அவர்கள் சாமானியன் பட தயாரிப்பாளர் திரு.மதியழகன் அவர்களுக்கும், இயக்குநர் ராகேஷ்‘ அவர்களுக்கும் சங்கம் மூலம் எனது கதை புகார் குறித்து கடிதம் அனுப்பினார்.

சங்கத்திலிருந்து அனுப்பிய கடிதத்திற்கு தயாரிப்பாளர் மதியழகன் மற்றும் இயக்குநர் ராகேஷ்‘ பதில் கடிதம் சங்கத்திற்கு அனுப்பாததால் தலைவர் திரு.கே.பாக்யராஜ் அவர்கள் தயாரிப்பாளர்கள் சங்கத்திற்கும், Pepsi சங்கத்திற்கும் எனது கதை புகார் குறித்து கடிதம் அனுப்பினார்.

நான் தயாரிப்பாளர்கள் சங்கத்தில் உறுப்பினர் என்பதால் கதை புகார் குறித்து தயாரிப்பாளர்கள் சங்கத்தில் புகார் கொடுத்தேன். சங்க மேலாளர் தினேஷ்‘ அவர்கள் பெப்சி அமைப்பிடமிருந்து கடிதம் வாங்கி வாருங்கள் என்று சொன்னார். நான் அவர் சொன்னபடி பெப்சி தலைவர் ஆர்.கே.செல்வமணி அவர்களிடமிருந்து கடிதம் தயாரிப்பாளர்கள் சங்கத்திற்கு பெப்சி மூலம் எனது கதை புகாருக்கான கடிதம் அனுப்பப்பட்டது.

இன்று வரை எனது கதை புகாருக்கான தீர்வு எனக்கு கிடைக்கவில்லை. 05- 03-2024 அன்று வாட்ஸ் அப் மூலம் 07-03-2024 அன்று சாமானியன் லிரிக் வீடியோ வெளியிடுவதாக செய்தி அறிந்து உடன் தென்னிந்திய திரைப்பட எழுத்தாளர்கள் சங்கத்தில் புகார் கொடுத்தேன். பட ரிலீஸ்க்கு முன் சாமானியன் படத்தின் மீது நடவடிக்கை எடுத்து எனது கதை புகாருக்கான நியாயத்தை பெற்றுத்தரும்படி புகார் கடிதம் கொடுத்துள்ளேன். ஒரு வருட காலமாக சங்கங்களின் மூலம் எனது கதை புகாருக்கான தீர்வு கிடைக்காததால் நீதிமன்றத்தை நாடியுள்ளேன். நீதிபதி அய்யா அவர்கள் சாமானியன் கதையும் எனது கதையும் ஒன்று என்பதால் சாமானியன் எனது கதை பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வரை படத்திற்கு ஸ்டே கொடுக்க வைக்க வேண்டும் என்றும், இரு தரப்பையும் விசாரித்து நல்லதொரு தீர்ப்பு வழங்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என்று கோர்ட்டுக்கு சென்றிருக்கிறேன். நல்ல முடிவு கிடைக்கும்

## “கள்வன்“ திரைப்படம் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் என இருபாலரையும் கவர்ந்திழுக்கும் ஏராளமான பொழுதுபோக்கு தருணங்களை கொண்டுள்ளது” - ஆக்சஸ் ∴ பிலிம் பேக்டரி தயாரிப்பாளர் ஜி. டில்லி பாபு!

தயாரிப்பாளர் ஜி. டில்லி பாபுவின் ஆக்சஸ் ∴பிலிம் ∴பேக்டரி தரம்மிக்க படைப்புகளைத் தயாரிப்பதன் மூலம் திரைப்பட ஆர்வலர்கள் மற்றும் வர்த்தக வட்டாரத்திலும் தொடர்ந்து கவனத்தை ஈர்த்து வருகிறது. இந்தத் தயாரிப்பு நிறுவனம் இப்போது வரவிருக்கும் “கள்வன்“ படத்தின் மூலம் பார்வையாளர்களை கவர தயாராகி வருகிறது. ஒளிப்பதிவாளர் பி.வி. ஷங்கர் இயக்கி இருக்கும் இந்தப் படத்தில் ஜி.வி. பிரகாஷ்‘ குமார், பாரதிராஜா, இவானா மற்றும் தீனா ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படம் ஏப்ரல் 4, 2024 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகியுள்ளது.

ஆக்சஸ் ∴பிலிம் ∴பேக்டரி எப்போதும் பல்வேறு ஜானர் மற்றும் தனித்துவமான கதைக்களங்களைக் கொடுக்க ஆர்வமுடன் உள்ளது என்கிறார் தயாரிப்பாளர் ஜி. டில்லி பாபு. அட்வென்ச்சர் ஜானரில் ஏதாவது புது முயற்சி செய்ய வேண்டும் என காத்திருந்தபோது, “கள்வன்“ திரைக்கதை மூலம் ஒளிப்பதிவாளர், இயக்குநர் பி.வி. ஷங்கர் அந்த ஆசையை நிறைவேற்றினார். ஒளிப்பதிவாளர்கள், இயக்குநர்களாக மாறும்போது தாங்கள் சொன்னதை அப்படியே திரையில் காட்சிப்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை தயாரிப்பாளர்களுக்கு இருக்கும். ஒளிப்பதிவாளராக இருந்து இயக்குநராக மாறிய பி.வி. ஷங்கர் கதையின் போது தான் சொன்னதை திறமையாக அப்படியே திரையில் கொண்டு வந்துள்ளார்.


ஜி.வி. பிரகாஷ்‘ குமார் தனது சிறந்த நடிப்பிற்காக மட்டுமல்லாமல், தனித்துவமான பரிசோதனை முயற்சியிலான கதைகளைத் தேர்ந்தெடுக்கும் தனது ஆர்வத்திற்காகவும் பாராட்டப்படுபவர். இதற்கு முன்பு, “பேச்சுலர்“ படத்தில் தயாரிப்பாளர் ஜி. டில்லி பாபு- ஜி.வி. பிரகாஷ்‘ குமார் இணைந்து பணியாற்றியுள்ளனர். குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் என இருபாலரையும் மகிழ்விக்கும் ஏராளமான பொழுது போக்கு தருணங்களுடன், அனைத்து வயதினருக்கும் மகிழ்வான அனுபவமாக “கள்வன்“ இருக்கும்.

# கா (The forest)



மைனா, சாட்டை, மொசக்குட்டி, சௌகார்-பேட்டை, பொட்டு போன்ற தரமான படங்களை தயாரித்த ஷாலோம் ஸ்டுடியோஸ் ஜான் மேக்ஸ் அடுத்ததாக ஆண்ட்ரியா முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்க கா என்கிற திரைப்படத்தை தயாரித்து உள்ளார்கள்.

இந்த படத்தின் தயாரிப்பாளர் ஜான் மேக்ஸ் அவர்கள் கூறியதாவது:- மைனா படத்திற்கு பிறகு காட்டை மையப்படுத்தி மிகவும் சிரமப்பட்டு ரிஸ்க் எடுத்து இந்த படத்தின் படப்பிடிப்பை நடத்தி தயாரித்துள்ளதாகவும், நிச்சயம் இந்த படம் மைனாவை தாண்டி மிகப்பெரிய அளவில் மக்கள் மத்தியில் பேசப்படும் என்று நம்பிக்கையுடன் கூறினார்.





இந்த படத்தின் இயக்குனர் நாஞ்சில் அவர்கள் கூறியதாவது:-

ஆண்ட்ரியா முதன்மை கதாபாத்திரத்தில் மிகவும் ஈடுபாட்டுடன் சிறப்பாக நடித்துக் கொடுத்துள்ளார் என்றும், மேலும் சலீம் கவுஸ் தனது மிரட்டல் நடிப்பை இந்த படத்துக்கு வழங்கி உள்ளார் என்று பெருமையாக கூறினார். இவர்களுடன் அர்ஜுன் சிங் முதன்மை கதாபாத்திரத்தில் அறிமுகமாகியுள்ளார். இது சர்வதேச கடத்தல் கும்பலை பற்றியும், அவர்களிடம் காட்டுக்குள் எதோச்சையாக சிக்கிக் கொள்ளும் வைல்ட் அனிமல்ஸ் புகைப்பட கலைஞராக ஆண்ட்ரியா நடித்துள்ளார். இவற்றையெல்லாம் மீறி இந்த படத்தில் அனைவர் மனதையும் ஆட்கொள்ளும் உணர்வு பூர்வமான மெல்லிய காதலும் இருக்கிறது.

தலைக்கோணம் போன்ற அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியிலும், விஷ பாம்புகள் சுற்றித் திரியும் குகைகளுக்குள்ளும் தொழில்நுட்ப கலைஞர்களுடன் சென்று படப்பிடிப்பு நடத்திய தனது அனுபவத்தை பற்றி பகிர்ந்து கொண்டார். கண்டிப்பாக இந்த படம் ரசிகர்களுக்கு ஒரு பெரிய அனுபவமாக இருக்கும் என்று அடித்து சொல்கிறார்.

நகரம் போன்ற பல வெற்றி படங்களுக்கு இசையமைத்த இசையமைப்பாளர் சுந்தர் சி பாபு பின்னணி இசையில் ரசிகர்களை கதை நடக்கும் காட்டுப் பகுதிக்கு அழைத்துச் செல்லும் அளவுக்கு மிரட்டலான பின்னணி இசையை கொடுத்துள்ளார். ஒளிப்பதிவை அறிவழகனும், படத்தொகுப்பை எலிசாவும், கலை இயக்கத்தை ஏ.பழனிவேலும், சண்டை பயிற்சியை இடி மின்னல் இளங்கோவும் செய்துள்ளனர். இந்தப் படத்தில் விஷுவல் எபெக்ட்ஸ் ஒரு முக்கிய கதாபாத்திரமாக பங்கு வகித்திருக்கிறது.

தமிழ் சினிமாவில் புதிய தரமான திரைப்படங்களை வாங்கி வெளியிட வந்திருக்கும் சசிகலா புரொடக்ஷன் நிறுவனர் பி.அந்தோணி தாஸ் இந்த படத்தை தமிழகமெங்கும் பிரம்மாண்டமாக வெளியிடுகிறார்.




# செம்மறிகள்

இயக்குனர் ஜேப்பி

,இப்படியெல்லாம் பேசுறதுக்கு உனக்கு வெட்கமா இல்ல?

இதுலெ வெட்கப்பட என்ன இருக்கு? ஆதிகாலந் தொட்டு ஆம்பளைங்க பண்ணிட்டு இருந்தீங்க. மன்னர்லெருந்து மந்திரி வரை கோவளன்லெருந்து கோவனாண்டி வரை யோக்கியம்?. அப்ப யாரும் வெட்கப்படலெ. வப்பாட்டி வச்சுக்குறது கௌரவம். அன்னிக்கி பெண் சுதந்திரம் பேச்சாளவுலகூட இல்லெ. நாங்களும் வாயை மூடிக்கிட்டு வப்பாட்டியா இருந்தோம் இப்பதான் பெண் சுதந்திரத்தை பத்தி வாய்கிழிய பேசுறாங்களே அதான் நாங்களும் உங்களோட பழைய ஸ்டைல்லெ வாழ்ந்து பாக்கலாம்னு கொஞ்சம் ஆசை. ஆனா அப்பக்கூட காமம் இல்லெ காதல்-தான். ஏன்னா நாங்க பாரத பொண்ணுங்க.

என்னை புருஞ்சுக்கோ தாமரை! உண்ட வீட்டுக்கு என்னால ரெண்டகம் பண்ண முடியாது. அது துரோகம்!

தப்பு பண்றது நீங்க இல்லெ எங்கப்பா. துரோகம் பண்றது நீங்க இல்லெ அதுவும் எங்கப்பாதான். உங்க வீட்டு உப்ப திண்டவர்தா-னே எங்கப்பா. உங்க அப்பா கொடுத்த நெலத்த வெச்சுதானே இந்த பெரிய மனு‘ன் போர்வை.

அவருக்கு நம்ம காதல் தெரியாது.?

அதனாலதான் ரெண்டு பேரும் சேர்ந்து பேசிகிட்டு இருக்கோம்.

எம்மனசுக்கு தப்புன்னு நல்லாத் தெரிஞ்சும்...?

ஒருத்தர் மட்டும் பண்ணா தப்பு. கூட்டனி சேந்திட்டா இதுதான் கல்சுரல்.

ஓகே. எனக்கென்ன கரும்பு திண்ணக் கசக்குமா? படபடவென சொன்னான் சங்கரநாதன்.

அப்பா நிம்மதி! சங்கரநாதனை கட்டியணைத்து பின்பக்கமாக கண்ணத்தில் இதழ் பதித்தாள்

பாலகிரு‘ணனின் விருப்பத்தை தாயார்

தெரிந்து கொண்டதும் அளவில்லாத ஆனந்தம் கொண்டாள். திருமணம் நிச்சயிக்கப்பட்டது சிற்றம், பெரியோரின் ஆசிர்வாதத்துடன் திருமணம் இனிதே நடந்தேறியது. திருமண வேலையாக சென்றதுபோல தாலி கட்டும் நேரம் தான் இல்லாது தவிர்த்துக் கொண்டான் சங்கரநாதன்.

முதலிரவு அறையில் பெருமாள் மட்டும் அமர்ந்திருக்கிறான். அவனுக்குள் என்றுமில்லாத புதியதொரு படபடப்பு உடம்பில் உ'ணம் பெரியதொரு எதிர்பார்ப்பு, கதவு திறக்கப்படாதா! என கதவை-யே எதிர்நோக்கியிருந்தது.

கட்டிலின் அலங்காரம் பாலகிருஷ்'ணனை பிரமிக்க வைத்தது. கட்டிலின் நுனியில் அமர்ந்தான் அலங்காரங்களை தழுவி பார்த்தான்.

கதவு திறக்கப்பட்டது பால் செம்புடன் உள்ளே வந்தாள் தாமரை. தாமரையை பார்த்தவுடன் சொல்ல வண்ணா சந்தோஷம் அடைந்தான். அவள் அழகு ரதமாக வந்து நின்றாள் பார்வையால் விழுந்தினான். அவள் இவனை கண்டு கொண்டதாக தெரியவில்லை.

உள்ளே வந்தாள் கதவை அடைத்தாள். பால் செம்பை ஓரமா வைத்தாள் காலில் கும்பிட்டு விழுவாள் என்று எதிர்பார்த்து ஏமாந்தான். கட்டிலில் அமர்ந்தாள் ஏதாவது பேச வேண்டும் என்று உள்மனம் துடித்தது. தாமரையின் பெயரை தனக்குள் பல தடவை சொல்லிப் பார்த்துக் கொண்டான். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு

தாமரை...! அவள் திரும்பி பார்க்கவில்லை. பதில் இல்லை.

நீ ஒன்னு செய்ய மறந்துட்ட ! கால்லெ கும்பிட்டு விழுவாங்க. மௌனத்தை தொடர்ந்தாள் தாமரை.

உன்னை பார்க்கும் போது அந்தக்கால சாவித்திரி மாதிரி அழகா இருக்குறே புள்ளெ! உன்னோட மொகம் பௌர்ணமி நெலா இரவு மாதிரி பளபளன்னு இருக்கு. உன் நெத்தே மூனாம் பிறை நெலாவா கவுத்தி வெச்சாப்புலெ இருக்கு. மூக்கு கொடைமொளகாகணக்கா கும்முன்னு எடுப்பா இருக்கு. உதடு கோவப்பழம் மாதிரி ரத்தச் செவப்புல இருக்கு. உங்கையி... கையி.. என்றபடி மெல்ல நகர்ந்து அவளிடம் வந்த பாலகிரு'ணன் தாமரையின் கையை மெல்ல தொட்டான். அவன் கை பட்டதும் படக்கென தனது கையை எடுத்துக்கொண்டவள்.

எனக்கு தலைவலியா இருக்கு

என்றாள் அவசரத்தனமாக. அவள் முகத்தை பாசத்துடன் பார்த்த பாலகிரு'ணன் நா மருந்து தடவி விடவா? கேட்டான் பாலகிரு'ணன்.

வேண்டாம் தூங்கினாள் சரியா போயிடும்

அவன் பக்கம் திரும்பாமலே பதில் கொடுத்தாள் தாமரை. மனம் வாடிப்போன பாலகிரு'ணன்

என்ன புள்ளெ மொத ராத்திரி அதுமா! ஒறங்க-னுமுன்னு சொல்றே? வாழ்நாள்லெ எம்புட்டோ ராத்திரி வரலாம்.எல்லாம்மொத ராத்திரி ஆயிடுமா?

நம்ம ரெண்டு பேரும் புதுசு ரெண்டு மனசும் புதுசு. இந்த சந்திப்பு புதுசு இப்படி எல்லாமே புதுசு.

என்னதேன் தலைவலின்னாலும் ஒறக்கம் வருமா? நா இப்ப வெட்கமில்லாம ஒரு உம்மைய சொல்லே-றன் புள்ளெ.எப்ப ஒன்னைய பொண்ணுன்னு பார்த்தேனோ அப்பவுலெருந்து எனக்கு ஒரக்கமில்லெ.

என்னடா இதையிலாம் வெட்கமில்லாம சொல்றனேன்னு பாக்குறியா? இது மட்டுமில்லெ இம்புட்டு நாளா நா எப்படி இருந்தேங்குற உம்மைய பூராம் இப்ப உங்கிட்ட சொல்லப் போறேன் ஏன்னா! இன்னமேலுக்கு எனக்கு எல்லாமே நீதானே!

தரகுரு வீட்டோட மாப்பிள்ளைன்னு சொல்லி ஆத்தாவ சம்மதிக்கெ வச்சுபட்டாரு நா கேள்விப்பட்டவுடனே துடிச்சுப் போயிட்டேன். இந்த காலத்துலெ வீட்டோட மாப்பிள்ளையான்னு ஆத்தாகிட்டெ ஒரே வம்பு வழக்கு பண்ணேன்.

அப்ப எங்காத்தா ஒரு வார்த்தை சொல்லுச்சு. பொண்ண பாரு புடிச்சா பேசுவோம்னு அது மட்டும் சொல்லல உன்னையே பார்த்திருக்க முடியாது.

உன்னைய பாத்த மட்டுலயே பசை மாதிரி உன் நினைப்பு ஒட்டிகிருச்சு நா படிக்காத பயதேன் பாரதஞ் சொல்லுவேன் ராமாயணம் சொல்லுவேன் அரிச்சந்திர மயான காண்டம் நாடகம் சொல்லுவேன் அம்புட்டு கருவத்தி-ன்னு ஆத்தா என்னை பெருமையா சொல்லும் பாட்டு நல்லா பாடுவேன் உருகும் போது பாட ஆரம்பிச்சின்னா வயக்காட்டுல வேலை பழுவே தெரியாது அம்புட்டு நல்லா பாடுவேன் ஊர்ல என்னைய ரொம்ப பேரு பாட்டுகாரன் கேலி பண்ணுவாங்க அதுக்கு எனக்கு கோவம் வந்துரும்

ஏன்னா! எனக்கு கேலி பண்ணா பிடிக்காது தன் பெருமைகளை அடுக்கிக் கொண்டே போனான் பாலகிரு‘ணன் எரிச்சிடந்தாள் தாமரை பொறுமை இழந்தாள்.

எனக்கு தலை வலிக்குது நா தூங்கணும் சொல்லிட்டு கட்டில் விழுந்து காலை நீட்டினாள் பார்த்தபடி இருந்த பாலகிரு‘ணனுக்கு தாமரையின் குரட்டை த்தம் பெரிய ஏமாற்றத்தை கொடுத்தது. தரையில் துண்டை விரித்து தூங்க ஆரம்பித்தான்.

சில நாட்கள் கழித்து...

காலையில் சங்கரநாதன் வழக்கம் போல எழுந்தான்.குளித்தான் டிபன் எடுத்துக்கொ-ண்டு கிளம்பினான் எல்லாம் வழக்கம் போல இருப்பதாக காட்டிக் கொண்டாலும் பாலகிரு‘ணனிடம் மட்டும் யதார்த்தமாக பேச முடியவில்லை ஏனோ தெரியவில்லை அவன் மேல் இனம் புரியாத வெறுப்பு அவனைப் பார்க்க பேச விருப்பமில்லை அதை கோபமென்று அவனால் அளவிட முடியவில்லை. வெளியே வழக்கம் போல் இருப்பது போல அவன் நடித்தாலும் தொண்டைக்குள் முள் மாட்டிக்கொ-காண்ட பரிதவிப்பு தன் க்‘டத்தை சொல்லி கதறி அழ ஒரு நண்பன் கூட இல்லாதது சஙகரநாதனின் துரதர்‘□டம் என்றே எண்ணினான். தனக்கு எல்லாமே தாமரை என்றல்லவா எண்ணியிருந்தான். இடையில் இப்படி தட்டிப் போகும் என்று எதிர்பார்க்கவில்லை யார் மேல் குற்றம் சொல்வது எல்லோருக்கும் சந்தர்ப்ப சூழல் நினைவுகளில் அல்ல்பட்டான் சங்கரந-ாதன் . காற் கிழித்துக்கொண்டு தார்சாலை நோக்கி பேக் வேகமாக சென்று கொண்டிருந்தது தம் முன்னோர்கள் செய்த பாவத்தின் பலனோ.

வண்டிச்சாலையில் பாலகிரு‘ணனும் முனியனும் நடந்து போய்க் கொண்டிருக்கபின்னால் வந்த சங்கரநா-தன் தர்ம சங்கடமானன். பைக் சத்தம் கேட்டதும் முன்னே சென்று கொண்டிருந்த இருவரும் திரும்பி பார்த்து நின்றனர். வேறு வழியின்றி சம்பிரதாயத்திற்கு பேச வேண்டிய கட்டாயத்தில் நின்றான் சங்கரநாதன். அவன் உள் மனம்பொல பைக் உறுமிக்கொண்டிருந்தது. என்ன காலையிலேயே இந்த பக்கம்? இது சங்கரநாதனின் புன்னகை கலந்த அந்த கேள்வி அய்யாவுக்கு காடு கரையலே சுத்தி காட்டனுமம்னு நாந்தேன் கூட்டியாந்தேன்.

j **”வாழ்வை நீ வாழ்ந்து பாரு”**

வாழ்வை நீ வாழ்ந்து பாரு
சோர்வை நீ தூரப் போடு
இன்பமென்ன இந்த வாழ்க்கை
சொல்லிக் கொடுக்கும்
துன்பம் உன் நண்பன் அல்ல
இன்பம் உன் எதிரி அல்ல
வாழ்க்கை ஒரு வசந்தமே
வாழ்ந்து பார் நண்பா!
கலங்காதே!
கலங்கி நீ மயங்காதே!
துணியாமல் தயங்காதே!
தயக்கங்கள் விட்டுத்தள்ளடா!
பதறாதே!
பதறி நீ சிதறாதே!
விடியாமல் போகாதே!
வெற்றியுன் பக்கமல்லடா!

அ.வேளாங்கண்ணி, திருச்சி



பிளாஸ்டிக் பை தவிர்ப்போம்!
மண்வளம் காப்போம்!!
உலகின்
துணிப்பை மாநகரம்
திண்டுக்கல் மாவட்டம் என்பதை உருவாக்கிட...
திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள 357 கிராமங்களிலும் துணிப்பை தொழிற்சாலைகளை நிறுவி...
ஆண், பெண், திருநங்கை மற்றும் படித்த மாணவ, மாணவிகளுக்கும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி...
தனி குடும்பத்தின் தற்சார்பு பொருளாதாரத்தை உயர்த்துவதே எமது குறிக்கோள்...
நமது திண்டுக்கல் பாராளுமன்ற வேட்பாளராகிய எனக்கு
நமது வாழ்க்கை மாற்றத்திற்கான சின்னம்
மோதிரம்
சின்னத்தில் வாக்களிப்பீர்!
வெற்றி பெறச் செய்வீர்!!
உங்கள் ஊழியன்
ஆண்டிமடம் ஆறுமுகசாமி
தேர்தல் நாள்
19.04.2024
9
ஆறுமுகம்.ரா
துணிப்பை தைக்க தையல் இயந்திரம் இருக்கா? உடனடி வேலை வாய்ப்பு தருகின்றோம்...
அழையுங்கள் : 63 84 84 84 45/46

# அரண்மனை 4 டிரைலர் வெளியீட்டு கொண்டாட்டம்

சுந்தர் சி இயக்கத்தில் ப்ளாக்பஸ்டர் வெற்றிப் படத்தின் நான்காம் பாகம் “அரண்மனை 4“ படத்தின் டிரைலர் வெளியீட்டு விழா !

Avni Cinemax (P) Ltd சார்பில் அரண்மனை 4 டிரைலர் வெளியீட்டு கொண்டாட்டம் !! “G சுந்தர் மற்றும் Benz Media PVT LTD சார்பில் A.C.S அருண்குமார் தயாரிப்பில், சுந்தர் சி நடித்து, இயக்க, தமன்னா, ராஷீ கண்ணா, யோகி பாபு, கோவை சரளா உட்பட எண்ணற்ற நட்சத்திரங்களின் நடிப்பில், அரண்மனை பட வரிசையில் நான்காம் பாகமாக உருவாகியுள்ள திரைப்படம் “அரண்மனை 4“. விரைவில் திரைக்கு வரவுள்ள இப் படத்தின் டிரைலர் வெளியீட்டு விழா, திரை நட்சத்திரங்கள் சூழ, பத்திரிக்கை ஊடக நண்பர்கள் முன்னிலையில் கோலாகலமாக நடைபெற்றது.

இந்நிகழ்வினில்..

நடிகை, தயாரிப்பாளர் குஷ்‘பு பேசியதாவது… இப்படத்தின் நான்கு பாகங்கள் வரை வெற்றிகரமாகப் போக முக்கிய காரணம் சுந்தர் சி தான். அவருடன் 30 வருடமாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். அவர் ஒவ்வொரு படத்திலும் எப்படி வித்தியாசமாக ரசிகர்களை மகிழ்விக்கலாம் என எப்போதும் யோசித்துக் கொண்டே இருப்பார். வீட்டில் இருக்கும் இரு குழந்தைகளும், ஹாரர் திரைப்படங்களுக்கு ∴ பேன். எனவே தான் அவரும் இந்த ஜானரில் தொடர்ந்து படமெடுக்கிறார். அரண்மனை படத்தை சோறு கட்டிக்கொண்டு வந்து திரையரங்கில் குடும்பத்தோடு ரசிக்கும் ரசிகர்கள் தான் இந்த வெற்றிக்கு காரணம். அவர்களுக்கு நன்றி. மேலும் எங்களுக்கு உறுதுணையாக இருக்கும் Benz Media A.C.S அருண்குமார் சார், இப்படத்தில் உழைத்த அனைத்து கலைஞர்களுக்கும் நன்றி. ஒரு படத்தில் இரண்டு நாயகிகள் ஒன்றாக இருக்க முடியாது என சொல்வார்கள். ஆனால் இந்த படத்தில் தமன்னா, ராஷீக்கண்ணா அவ்வளவு ஒத்துழைப்பு தந்தார்கள். கோவை




சரளா மேம் மற்றும் நடித்த அனைவருக்கும் என் நன்றிகள். எங்கள் வீட்டுப் பிள்ளை ஹிப்ஹாப் ஆதி அட்டகாசமாக இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவாளர் சூப்பரான விஷ்‘‘வல்ஸ் தந்துள்ளார். எல்லோருக்கும் என் நன்றிகள். அரண்மனை 3 பாகங்களை விட இப்படம் இன்னும் அட்டகாசமாக இருக்கும். இறுதியாக எங்கள் மகிழ்ச்சிக்காக தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கும் என் கணவர் சுந்தர் சிக்கு நன்றிகள்.

நடிகர் சந்தோஷ்‘ பிரதாப் பேசியதாவது… சுந்தர் சி சார் படத்தில் வேலை பார்ப்பது, நமது அப்பா அண்ணன் உடன் வேலை செய்வது மாதிரி தான். அவ்வளவு நன்றாகப் பார்த்துக் கொள்வார். அவருக்கு என்ன வேண்டும் என்பதை தெளிவாகச் சொல்லிவிடுவார். வேலை எப்போதும் ஜாலியாக இருக்கும். இப்படத்தில் வேலை பார்த்தது மறக்க முடியாத அனுபவம். இந்தப் படம் கண்டிப்பாக உங்கள் எல்லோரையும் சந்தோ‘ப்படுத்தும்.

நடிகர் ஜெயப்பிரகாஷ்‘ பேசியதாவது நடிக்க வந்து 10 வருடங்களுக்குப் பிறகு தான் சுந்தர் சி சார் படத்தில் வாய்ப்பு கிடைத்தது. ஒவ்வொரு படத்திலும் நமக்கு வாய்ப்பு வருமா என ஏக்கம் இருக்கும். நல்ல வேலை தெரிந்த இயக்குநர் உடன் வேலை பார்க்கும் போது நமக்குள் உற்சாகம் தானாக வரும். அவருடன் எல்லா படத்திலும் வேலை பார்க்க ஆசை. அத்தனை கச்சிதமான இயக்குநர். நடிகர்களை மிக நன்றாகப் பார்த்துக் கொள்வார். இந்தப் படம் கண்டிப்பாக பிரமாண்ட வெற்றி படமாக இருக்கும். அனைவருக்கும் நன்றி.

VTV கணேஷ் பேசியதாவது.. தெலுங்கில் பிரபாஸ் படம் பண்ணிக் கொண்டிருக்கும் போது, தான் இந்தப் படம் செய்தேன். ஆனால் திடீரென சுந்தர் சி மீசையை எடு என்றார். அய்யய்யோ பிரபாஸ் படம் பிரச்சனையாகிடுமென்று தயங்கினேன். ஆனால் சுந்தர்சியின் பாசவலையினால் செய்தேன். இப்போது ஃப்ரேம் பார்க்கையில் அவ்வளவு அட்டகாசமாக இருக்கிறது. யோகி பாபு, சரளா மேடமுடன் சூப்பராக காமெடி ஓர்க்கவுட் ஆகியுள்ளது. எப்போதும் பேய் நம்மைக் கைவிடாது என சுந்தர் சி சொல்வார், அது இந்தப்படத்திலும் நிரூபணமாகியுள்ளது. அவர் 120 வருடம் வாழ்வார், ஏனெனில் அவர் மனைவி தான் காரணம். இப்படி ஒரு மனைவி இருந்தால், யார் வேண்டுமானாலும் 100 வயசுக்கு மேல் வாழலாம். சுந்தர் சிக்கு வாழ்த்துக்கள். படத்திற்கு வாழ்த்துக்கள்.

நடிகை கோவை சரளா பேசியதாவது… இந்த கம்பெனியில் நான் ஒரு கம்பெனி ஆர்டிஸ்ட். எல்லா படத்திலும், நான் இருப்பேன். இவ்வளவு பெரிய படத்தை கட்டி ஆள்வது சுந்தர் சி சாரால் தான் முடியும். சின்ன தவறு செய்தாலும் கரெக்டாக கண்டுபிடித்துச் சரி செய்து விடுவார். மிகத் திறமையானவர். இவரைப்போல் அனுபவம் வாய்ந்த ஒரு இயக்குநர் தமிழ் சினிமாவில் இப்போது யாருமே இல்லை. படத்தில் வேலை பார்ப்பது போன்றே இருக்காது. இப்படம் மற்ற அரண்மனை படங்கள் போல் இருக்காது. அதைவிட அட்டகாசமாக இருக்கும். தமன்னா, ராஷீகண்ணா நன்றாக நடித்துள்ளனர். படம் வெற்றி பெற வாழ்த்துக்கள்.

நடிகர் யோகிபாபு பேசியதாவது… இப்படத்தில் எனக்கு வாய்ப்பு தந்த சுந்தர் சி சார் தயாரிப்பாளருக்கு நன்றி. கலகலப்பு படத்தில் வேலை பார்த்த போது என்னை அழைத்து நீங்க நடந்து வரும்போது உங்க தலைக்குப் பின்னாடி ஒரு சக்கரம் சுத்துது என வாழ்த்தினார். அவரது ஆசிர்வாதத்தால் இன்னும் திரையுலகில் என் வாழ்க்கை சக்கரம் சுத்த வேண்டும். அவர் நிறைய வாய்ப்பு தர வேண்டும். எல்லோருக்கும் என் நன்றிகள்.

நடிகை ராஷீ கண்ணா பேசியதாவது… எல்லா அரண்மனை படத்தை விடவும் இந்த படத்தின் டிரெய்லர் அட்டகாசமாக இருக்கிறது. இந்தப் படம் கண்டிப்பாக எல்லா படத்தை விடவும் பிரம்மாண்டமாக இருக்கும். சுந்தர் சி அத்தனை அழகாக படத்தை எடுத்துள்ளார். அவர் இந்த மாதிரி கமர்ஷியல் படங்களை எடுப்பதில் வல்லவர். இந்தப் படம் வேலை பார்த்தது ரொம்ப ஜாலியாக இருந்தது. நடிகை தமன்னாவுடன் இணைந்து தெலுங்கு படத்தில் வேலை செய்துள்ளேன். இப்போது தமிழில் நடிப்பது மகிழ்ச்சியாக உள்ளது. படம் அட்டகாசமாக வந்துள்ளது. ஹிப் ஹாப் ஆதி சூப்பர் பாடல்கள் தந்துள்ளார். இப்படத்தில் நானும் இணைந்திருப்பது மகிழ்ச்சி. படம் கண்டிப்பாக உங்கள் எல்லோரையும் மகிழ்விக்கும் நன்றி.

நடிகை தமன்னா பேசியதாவது… சுந்தர் சி, குஷ்பூ மேடம் எனக்கு ஃபேமிலி மாதிரி. பணம், வாய்ப்பு எல்லாம் அப்புறம் தான். என்னை அவ்வளவு நன்றாக பார்த்துக் கொண்டார்கள். சுந்தர் சி சார் உடன் என்றால் ஓகே என்ன படம் வேண்டுமானாலும் செய்யலாம், அவரை அவ்வளவு நம்புகிறேன். மிகத் திறமையான இயக்குநர். அவர் நினைத்தால் ஹீரோக்களை வைத்து என்ன மாதிரி படங்கள் வேண்டுமானாலும் செய்ய முடியும். ஆனால் பெண்களை மையமாக வைத்து எல்லோரும் ரசிக்கும் படி கதை செய்துள்ளார், அவருக்கு நன்றி. குஷ்பூ மேடத்தால் முடியாதது எதுவுமே இல்லை. சினிமா, பொலிடிகல் என எல்லாவற்றிலும் அசத்துகிறார். அவர் என் இன்ஸ்பிரேஷன். ராஷீ கண்ணாவும் நானும் ஏற்கனவே தெலுங்கு படம் செய்துள்ளோம். மிகச்சிறந்த கோ ஆர்டிஸ்ட், மிக உண்மையானவர். என்னை அதிகம் நேசிப்பவர். அவர் நிறைய பியூட்டிஃபுல் படங்கள் செய்துள்ளார் வாழ்த்துக்கள். கோவை சரளா மேடம் செம்ம ஜாலியானவர். இப்படத்தில் நானும் இணைந்திருப்பது மகிழ்ச்சி. இப்படம் வெளியாவதற்காக நானும் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கிறேன். நன்றி

இசையமைப்பாளர் ஹிப்ஹாப் ஆதி பேசியதாவது… அரண்மனை 4 சுந்தர் சி அண்ணாவுடன் ஆறாவது படம். என்னை

இசையமைப்பாளராக, ஹீரோவாக அறிமுகப்படுத்தி என் மீது மிகப்பெரும் அன்பையும், நம்பிக்கையையும் வைத்திருக்கும் அண்ணாவிற்கு நன்றி. அரண்மனை 4 எல்லாப் படங்களையும் விடப் பிரம்மாண்டமான வெற்றி பெறும். தமன்னா, ராஷீகண்ணா இருவரும் மிக அழகாக இருக்கிறார்கள். படத்தில் அத்தனை அழகாக நடித்துள்ளனர். யோகிபாபு, சரளா மேடம் எல்லோருக்கும் வாழ்த்துக்கள். நன்றி.

இயக்குநர் சுந்தர் சி பேசியதாவது… எல்லோருக்கும் வணக்கம். அரண்மனை இப்போது நான்காம் பாகத்துடன் வந்துள்ளேன், முதல் பாகம் செய்யும் போது, இது இப்படி சீரிஸாக மாறும் என நினைக்கவே இல்லை. அரண்மனை 3 படத்திற்கு கிடைத்த வெற்றி தான் இப்படம் உருவாக காரணம். எப்போதும் நான் பணத்திற்காக இந்தப்படத்தைச் செய்யலாம் என நான் நினைத்ததே இல்லை. ஒரு நல்ல கதை, ஐடியா கிடைத்ததால் மட்டுமே இந்தப்படத்தைத் துவக்கியுள்ளேன்.

இப்படத்திற்கும் பின் ஒரு அட்டகாசமான ஐடியா கிடைத்தது. நம் நாட்டை ஆக்கிரமித்தவர்கள் வட இந்தியாவைப் பிடித்த அளவு, அஸ்ஸாம் பக்கம் பிரம்மபுத்திராவை தாண்டிப் போகவில்லை. அது ஏன் எனக் கேட்டு ஆராய்ந்தால், பாக் எனும் ஆவிகளின் சக்தி பற்றிய சுவாரஸ்யமான விஷயம் சிக்கியது. அதை வைத்து, மிக சுவாரஸ்யமான கதையை அரண்மனை 4 இல் செய்துள்ளோம். நான் வேறொரு படத்தில் வேலை செய்த போது இந்த ஐடியா கிடைத்தது. இதில் வேலை பார்க்கலாமா? எனத் தயங்கினேன். அந்த நேரத்தில் ஒரு பயணம் மேற்கொள்கையில் ஒரு சின்ன பெண், என்னிடம் அங்கிள் அரண்மனை 4 எப்போது வருமென்றார் ?, அந்தப்பெண் என் தயக்கத்தை போக்கி விட்டார். உடனே இந்த படம் ஆரம்பித்து விட்டேன். என் தயாரிப்பாளர்கள் கதையே கேட்கவில்லை. முழு ஆதரவு தந்தார்கள். அரண்மனை முதல் மூன்று படங்களை விட இப்படத்தில் எல்லாமே பிரம்மாண்டமாக இருக்கும். இப்படத்தில் இரண்டு ஹீரோயின், ஒரு ஹீரோயின் ஒரே நேரத்தில் அவரைப் பார்த்தால் பயமாகவும் இருக்கனும், பரிதாபமும் வரனும், குழந்தைக்கு அம்மாவாக வரணும், யாரை அணுகுவது என்று நினைத்தேன். ஆனால் தமன்னா கேட்டவுடன் ஒத்துக்கொண்டார். அட்டகாசமாக நடித்துள்ளார். அவர் கேரியரில் இப்படம், அவரது வித்தியாசமான முகத்தைக் காட்டும். இப்படம் அவருக்கு பெயர் சொல்லும் படமாக இருக்கும். ராஷீக்கண்ணா எனக்கு மிகவும் கம்ஃபோர்ட்டான ஆர்டிஸ்ட். என்னை முழுமையாக நம்புவார். இப்படத்தில் நன்றாகச் செய்துள்ளார். அரண்மனை படத்தில் காமெடி முக்கியம். என் படத்திற்கு ரசிகர்கள் வரக்காரணம் காமெடி தான், அதை நிறைவேற்றனும். பேப்பரில் நாங்கள் எழுதுவது பாதி தான், ஆர்டிஸ்ட் தான் அதை முழுதாக மாற்ற வேண்டும். அந்த வகையில் யோகி பாபு, சரளா மேடம், VTV கணேஷ‘, சிங்கம் புலி எல்லோரும் கலக்கியுள்ளார்கள். மொத்தத்தில் அரண்மனை 4 மனதிற்கு மிகப் பிடித்த படமாக வந்துள்ளது. பின்னணி இசையில் வழக்கமான பேய் படம் போல இல்லாமல் வித்தியாசமாகச் செய்துள்ளார் ஆதி. எனக்கு எப்போதும் சப்போர்ட்டாக இருக்கும் என் மனைவிக்கு நன்றி. படத்தில் உழைத்த அனைவருக்கும் நன்றி. படம் ஏப்ரலில் வருகிறது ஆதரவு தாருங்கள் நன்றி.

அரண்மனை படத்தின் நான்காம் பாகம், மிகப்பெரும் பொருட்செலவில், பெரும் நட்சத்திரக்கூட்டணியுடன் பிரமாண்டமாக உருவாகியுள்ளது. முதல் மூன்று பாகங்கள் போலவே குடும்பங்கள் கவலை மறந்து சிரித்துக் கொண்டாடும் வகையிலான ஹாரர் காமெடியாக இப்படத்தை உருவாக்கியுள்ளார் இயக்குநர் சுந்தர் சி.

இப்படத்தில் சுந்தர் சி முதன்மை பாத்திரத்தில் நடிக்க, தமன்னா, ராஷீ கண்ணா, யோகி பாபு, கோவை சரளா, கே ஜி எஃப் ராம், VTV கணேஷ‘, சேசு, ஜேபி, டெல்லி கணேஷ‘, சந்தோஷ‘ குமார், தீரஜ் வி‘ணு ரத்தினம், .நமோ நாராயணன், மொட்டை ராஜேந்திரன், சிங்கம்புலி உட்பட பெரும் எண்ணிக்கையிலான நட்சத்திரக்கூட்டம் இணைந்து நடித்துள்ளனர்.

**ஆலகாலம் திரைப்படம் உருகுலைக்கும் ஓர் உண்மையின் கருவை மையமாக வைத்து உருவாகியிருக்கிறது.**

உலகமே கொண்டாடப் போகும் ஓர் உன்னதப்படைப்பாக உருவாகி இருக்கிறது ஆலகாலம்.

ஆலகாலம் என்றால் கொடிய நஞ்சு ஆகும். வஞ்சகம், சூழ்ச்சி, மது, போதை, அடக்குமுறை என்கின்ற விஷம் உலகையே அச்சுருத்திக் கொண்டிருக்கிறது, இதில் பெரும்பான்மையான மனித இனங்கள் சிக்கி சின்னா பின்னமாகிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில்.

இலட்சியத்தோடு வளர்த்தெடுக்கப்படும் மகன், வெற்றிக்காகப் போராடும் இளைஞன், தன்னம்பிக்கையுடன் கரம் கோர்க்கும் காதலி, இவர்கள் வாழ்க்கையை சூறையாடும் வஞ்சகம், சூழ்ச்சி எனும் ஆலகாலம்ழூ.

இதில் இருந்து இவர்கள் மீண்டார்களா ? தாயின் லட்சியம்,இளைஞனின் முயற்சி, காதலியின் நம்பிக்கை வெற்றி பெற்றதா என்பதே ஆலகாலம் ழூழு திரைப்படம் சொல்லும் கதை

இப்படத்தை ஜெய கிருஷ்‘ணா இயக்கியுள்ளார்.தமிழ்த்திரை உலகில் யாரிடமும் உதவியாளராக இல்லாமல் இயக்குநர்களான லோகேஷ்‘ கனகராஜ், உறியடி விஜயகுமார், கார்த்திக் நரேன் போன்ற இயக்குநர்கள் முத்திரை பதித்தவர்கள் .அவர்களைப் போன்று இப்படத்தை இயக்கி உள்ள ஜெயகிருஷ்‘ணாவும் யாரிடமும் உதவியாளராக இல்லாமல் தனது ரசனையின் மூலமும் தேடல் அனுபவத்தின் மூலமும் சினிமாவைக் கற்றுக் கொண்டு களத்தில் இறங்கி உள்ளார்.

காலா படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்த ஈஸ்வரிராவ் இப்படத்தில் அம்மாவாக முதன்மை வேடத்தில் நடித்துள்ளார்.

நாயகனாக,ஜெயகிருஷ்‘ணா, நாயகியாக சாந்தினி நடித்திருக்கிறார்கள். இவர்களுடன்



தீபா, பாபா பாஸ்கர், தங்கதுரை, கோதண்டம், சிசர்மனோகர் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

காதலும் பாசமும் நிறைந்த ஒரு குடும்பப் படமாக உருவாகியுள்ளது. தயாரிப்பு. ஸ்ரீ ஜெய் புரொடக்ஷன்ஸ்.

ஆக்சன் செண்டிமெண்ட் நிறைந்த இப்படத்தைப் பார்த்த அனைவரும் பாராட்டி வருகின்றனர். சூகுறிப்பாகத் தணிக்கைத் துறை அதிகாரிகள். கணவன், மனைவி, அம்மா ,குடும்பம் யென்பதையும் தாண்டி நல்ல சமூக நோக்கத்தோடு உருவாகியிருக்கும் ஒரு படமாக இருப்பதாகப் பாராட்டி இருக்கிறார்கள்.

தொழில் நுட்பக்குழுவைப் பொறுத்தவரை,
இயக்கம் -ஜெயகிருஷ்‘ணா
இசை - என்.ஆர்.ரகுநந்தன்,
ஒளிப்பதிவு -கா. சத்தியராஜ்,
எடிட்டர் -மு. காசிவிஸ்வநாதன்,
கலை இயக்கம் -தேவேந்திரன்
நடனஇயக்குநர் -பாபா பாஸ்கர், அசார்.
ஸ்டண்ட். -ராம்குமார்,
டிசைன்ஸ் -டிசைன்பாய்ண்ட் என்று தொழில்நுட்பக் கூட்டணி உருவாகி உள்ளது.
தயாரிப்பு. ஸ்ரீ ஜெய் புரொடக்ஷன்ஸ்.
நிர்வாகத் தயாரிப்பு. மணி தாமோதரன்,
மக்கள் தொடர்பு -சக்திசரவணன்

ஏப்ரல் 5ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ள இந்த ஆலகாலம் திரைப்படத்தை ஆக்சன் ரியாக்ஷன் நிறுவனம் சார்பில் ஜெனி‘ஷ் வெளியிடுகிறார்.

டில்லிபாபு தயாரிப்பில் P V சங்கர் இயக்கத்தில் ஜிவி பிரகாஷ்', தீனா, பாரதிராஜா மற்றும் பலர் நடித்து ஏப்ரல் 4 ல் வெளியாகும் படம் கள்வன்.

புஏ பிரகாஷ்"ம் தீனாவும் முதியோர் இல்லத்துல இருந்த பாரதிராஜவ தத்தெடுத்து ஊருக்கு பஸ்ல கூட்டிக்கொண்டு போறாங்க இவங்க ரெண்டு பேரும் யாரு? பாரதிராஜாவ ஏன் தத்தெடுத்து கூட்டிட்டுபோறாங்க? என்று பஸ்ல உள்ள ஒருவரிடம் பிளாஷ்'பேக் கதையை தீனா சொல்கிறார்.

ஜிவி பிராகாஷ்"ம் தினாவும் ஊரில் திருட்டு தொழில் செய்து பொழப்பு நடத்துறாங்க. அவங்க ஊர்ல அப்பப்ப யானை ஊருக்குள் வந்து யாரையாவது ஒருத்தரை மிதிச்சி சாகடிச்சிட்டு போய்விடும். இப்படி இருக்கும் சூழ்நிலையில் பக்கத்து ஊரில் மயான கொள்ளை திருவிழா நடப்பதையறிந்துஅந்த ஊருக்கு இருவரும் திருட போறாங்க. கதாநாயகி இவானா வீட்டில் திருடும்போது இருவரையும் போலீஸ்ல பிடிச்சு கொடுக்குறாங்க. இவர்கள்மீது கேஸ் போட்டால் இவர்களால் பிரச்சினை வரும் என்று கருதி பணமும் நகையும் வாங்கிகொண்டு இருவரையும் விட்டுவிட சொல்கிறார் இவானா அப்பா.

திருடனான ஜீவி பிரகாஷ்' இவனா மீது காதல் கொண்டு அவர் படிக்கும் பள்ளி வாசலிலே நிற்கிறார். இதையறிந்த இவானா திருடனான உன்னை காதலிக்க மாட்டேன் என சொல்கிறார். இப்படி செல்லும் கதையில் முதியோர் இல்லத்தில் இருக்கும் பாரதிர-ாஜவ தத்தெடுத்தால் இவானா தன் நண்பன் ஜிவி பிரகாஷை' காதலிப்பாள் என பிளா'பேக் கதையை தீனா சொல்லி முடிக்கிறார். ஜிவி பிரகாஷ்' தினாவிடம் இவானாவுடன் வாழ பணம் வேண்டும் அதற்கு பாராதிராஜவை நம்ம ஊருக்கு அழைத்து சென்று நம்ம ஊர் யானையால் இவரை சாகடிக்க செய்து விட்டால் அரசாங்கம் மூலம் 4 லட்சம் கிடைக்கும் என்று சொல்ல தினா சந்தோஷம் கொள்கிறார். ஜிவி பிரகாஷ்' தீனா இருவரும் போட்ட திட்டத்தால் யானை மிதித்து பாரதிராஜா இறந்து இவர்களுக்கு 4 லட்சம் கிடைத்ததா? பாரதிராஜாமீதுபாசம் கொண்ட இவானாவுக்கு இவர்கள்




போட்ட திட்டம் தெரிந்து காதலித்த ஜிவி பிரகாஷை கழட்டிவிட்டாரா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை.

ஜிவி பிரகாஷ்' சிறப்பாக நடித்துள்ளார். நண்பனாக தீனா சிறப்பான நடிப்பை கொடுத்துள்ளார். இயக்குநர் பாரதிராஜா கொடுத்த கேரக்டரை மிகவும் சிறப்பாக செய்துள்ளார். கதாநாயகியாக இவானா கோடுத்த கேரக்டரில் சிறப்பாக நடித்துள்ளார். மற்றும் இதில் நடித்திருக்கும் அனைவருமே சிறப்பாக நடித்துள்ளனர். ஜீவி பிரகாஷீன் பாடல்கள் இசையும் ரேவாவின் பிண்ணனி இசையும் ரசிக்க வைக்கிறது. ஒளிப்பதிவு படத்திற்கு பெரிய பலம். இயக்குநர் P V ஷங்கர் ஒரு கிராமத்து வாழ்க்கையை எல்லோரும் ரசிக்கும்படி சுவாராஸ்யமாக சொல்லியுள்ளார் பாராட்டுக்கள்.

ஜெயகிருஷ்ணா இயக்கத்தில் ஜெயகிருஷ்ணா, சாந்தினி, ஈஸ்வரிராவ், தீபா மற்றும் பலர் நடித்து வெளியாகியிருக்கும் படம் . ஆலகாலம் உருகுலைக்கும் ஓர் உண்மையின் கருவை மையமாக வைத்து உருவாகி வெளியாகியிருக்கிறது.
தயாரிப்பு. ஸ்ரீ ஜெய் புரொடக்ஷ்ன்ஸ். ஏப்ரல் 5ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ள இந்த ஆலகாலம் திரைப்படத்தை ஆக்சன் ரியாக்ஷன் நிறுவனம் சார்பில் ஜெனிஷ் வெளியிடுகிறார்.




கதை

ஆலகாலம் என்றால் கொடிய நஞ்சு ஆகும். வஞ்சகம், சூழ்ச்சி, மது, போதை, அடக்குமுறை என்கின்ற விஷம் உலகையே அச்சுருத்திக் கொண்டிருக்கிறது, இதில் பெரும்பான்மையான மனித இனங்கள் சிக்கி சின்னா பின்னமாகிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில். இலட்சியத்தோடு வளர்த்தெடுக்கப்படும் மகன், வெற்றிக்காகப் போராடும் இளைஞன், தன்னம்பிக்கையுடன் கரம் கோர்க்கும் காதலி, இவர்கள் வாழ்க்கையை சூறையாடும் வஞ்சகம், சூழ்ச்சி என்பதுதான் ஆலகாலம் கதை. இதில் இருந்து இவர்கள் மீண்டார்களா ? தாயின் லட்சியம், இளைஞனின் முயற்சி, காதலியின் நம்பிக்கை வெற்றி பெற்றதா என்பதே ஆலகாலம் திரைப்படம் சொல்லும் கதை

ஜெயகிருஷ்ணா கதாநாயகனாக சிறப்பாக நடித்துள்ளார். சாந்தினி கல்லாரி மிணவியாக, காதலியாக, மனைவியாக என கொடுத்த கதிபாத்திரத்தை சிறப்பாக செய்துள்ளார். காலா படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்த ஈஸ்வரிராவ் இப்படத்தில் அம்மாவாக முதன்மை வேடத்தில் நடித்துள்ளார். அம்மா கதாபாத்திரத்தில் ஈஸ்வரபிரசாத் சிறப்பாக நடித்து கைதட்டல் பெறுகிறார். தீபா, தங்கதுரை, சிசர் மனோகர் என இதில் நடித்த அனைவருமே சிறப்பாக நடித்துள்ளனர். என்.ஆர்.ரகுநந்தனின் இசையில் பாடல்களும் பிண்ணனி இசையும் ரசிக்க வைக்கிறது. கா. சத்தியராஜ், ஒளிப்பதிவு படத்திற்கு பெரிய பலம் காதலும் பாசமும் நிறைந்த ஒரு குடும்பப் படமாக இப்படத்தை எல்லோரும் ரசிக்கும்படி கொடுத்துள்ளார் இயக்குநர் ஜெய கிருஷ்ணா

## அணைந்த குரல் அவஸ்தை

சத்தம் வந்த வரை
ஒன்றும் தோன்றவில்லை
நின்ற பிறகு தான்
மதில் தேடுகிறது கண்கள்
தூரத்து குழந்தையின்
குரல் வளையில்
பூனையின் அழுகுரல்
பிராண்டல்களால் ஆனது
மிகச் சிறிய சாளரம் வழியே
நீண்டு கிடக்கும் மௌனத்தில்
சற்று முந்தைய அழுகுரல்
பாதமற்று போய்க் கொண்டேயிருக்கி-
றது
நின்று விட்டது தெரியாமல்
நீளும் மதிலை
வேறு வழியின்றி சாளரம்
அடைத்து நிறுத்துகிறேன்
அழுகுரல் எவ்வளவோ மேல்
அணைந்த குரல் அவஸ்தை....!

கவிஜி

## செய்திக் கதம்பம்!

-பாப்பனப்பட்டு வ.முருகன்

இந்த நகரத்தில் வசித்தால், அரசாங்கமே உங்களுக்கு 8 லட்ச ரூபாய் நிதி தரும்!

வெளிநாடுகளில் வசதியாக வாழ வேண்டும் என, நம் அனைவருக்குமே ஆசை இருக்கும். ஆனால், அங்கு செல்வது அவ்வளவு எளிதான காரியம் அல்ல.

புதிதாக ஒரு இடத்திற்குச் செல்வதாக இருந்தால், அங்கு நம் வாழ்க்கை முறையை சந்தோ'மாக அமைத்துக் கொள்ள, நிலமோ அல்லது வீடோ வாங்க வேண்டும்ளூ அல்லது ஏதாவது தொழில் தொடங்க வேண்டும்.

அதற்கு முதலில் நிறைய பணம் செலவாகும். ஆனால், உலகில் பல நாடுகளிலும், மக்கள் யாராவது தங்கள் நகரங்களில் வந்து தங்கமாட்டார்களா என காத்துக் கொண்டிருக் கின்றன. அப்படியொரு பகுதி தான், அமெரிக்காவின் ஒகலாமா மாகாணத்தில் உள்ள துல்சா.

உலகின் மிகச்சிறிய நகரமாக கருதப்படும் இந்த ஊரில், 4,11,000 பேர் வசித்து வருகிறார்கள். இந்த அழகான நகரத்தைக் காண, ஒவ்வொரு வருடமும், ஆயிரக்கணக்கானோர் வருகை தருகிறார்கள்.

தங்கள் நகரத்தின் மக்கள் தொகையை அதிகரிக்க முடிவு செய்த உள்ள□ர் அரசாங்கம், அதற்கு பல ஆர்வமூட்டும் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. அதன்படி, துல்சா நகரத்தில் நிரந்தரமாக தங்க விரும்பும் நபர்களுக்கு, புதிய வீடு கட்டுவதற்கு , பத்தாயிரம் அமெரிக்க டாலர் (இந்திய மதிப்பில் ரூபாய் 8 லட்சம்) வழங்கப்படுகிறது.

துல்சா நகர மக்கள்தொகையை அதிகரிப்பதே, இந்தத் திட்டத்தின் நோக்கம். இதுபோல் உதவித்தொகை கொடுத்தால், பலரும் இங்கு வந்து தங்குவதற்கு ஆர்வம் காட்டுவார்கள் என, உள்ள□ர் நிர்வாகம் கருதுகிறது. இதோடு சேர்த்து, இங்கு வருபவர்களு-



க்குத் தேவையான வேலைவாய்ப்பு மற்றும் பிற உதவிகளை வழங்கவும் தயாராக இருப்பதாக, அரசாங்கம் கூறுகிறது. ஆனால், இந்த உதவியைப் பெற வேண்டுமென்றால், சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

அதன்படி இந்த உதவித் திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் நபர், அமெரிக்காவில் வேலை பார்ப்பவராக இருக்க வேண்டும். ஒகலாமாவிற்கு வெளியே முழு நேர ரிமோட் ஜாபில் அவர் இருக்க வேண்டும். விண்ணப்பிப்பதற்கு முன், குறைந்தது ஒரு வருடமாவது மாநிலத்-திற்கு வெளியே வசித்திருக்க வேண்டும்.

அதுமட்டுமின்றி, விண்ணப்பிக்கும் நபர்கள், 18 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதோடு, ஒருவேளை இந்த திட்டத்தில் தேர்வாகும் பட்சத்தில், ஒரு வருட காலத்திற்குள், துல்சா நகரில் தங்கள் இருப்பிடத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

இந்த நிபந்தனைகளோடு சேர்த்து, தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், 30 நிமிட ஆங்கில மொழியிலான வீடியோ நேர்காணலில் பங்கேற்க வேண்டும். அதன் பின்னர் அவர்களது விவரங்கள் மற்றும் வருமானம் குறித்து ஆராயப்படும்.

இவை அனைத்திலும் தேர்வாகிறவர்களுக்கு, பத்தாயிரம் அமெரிக்க டாலர், வீட்டு வாடகைக்கான மாத தவணையாகவோ அல்லது புதிய வீடு

வாங்குவதற்காக மொத்தமாகவோ தரப்படும்.

ஏற்கனவே இந்தத் திட்டத்தின் கீழ், 2,500 பணியாளர்கள், துல்சா நகரத்திற்கு மாற்றலாகி யுள்ளனர். இதற்கு முன்பும் கூட, இதுபோன்ற உதவித் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

### மாட்டின் சிறுநீரில் குளித்து, சாணத்தை சன் ஸ்க்ரீமாக பயன்படுத்தும் மக்கள்!

ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள தெற்கு சூடான் நாட்டில், பசுக்களின் சிறுநீரை, அங்கு வாழும் பழங்குடியின மக்களில் ஒரு தரப்பினர், குளிப்பதற்குப் பயன்படுத்துகின்றனர். அத்துடன், பசுக்கள் வெளியேற்றும் சாணத்தை, சூரிய வெப்பத்திலிருந்து பாதுகாக்கும் சன் ஸ்கிரீமாக அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

தெற்கு சூடான் நாட்டில், அன்கோல் வதுசி என்ற இனத்தைச் சேர்ந்த மாடுகள், 8 அடி உயரம் வரை வளரக் கூடியவை. இவை, 500 அமெரிக்க டாலர், அதாவது இந்திய மதிப்பில் 41,000 ரூபாய் விலை மதிப்பு உடையவை.

இந்த வகை மாடுகள், முண்டாரி எனப்படும் பழங்குடியின மக்களிடம் அதிகம் உள்ளது. இதனை அவர்கள் மிகப்பெரும் சொத்தாக மட்டுமின்றி அதனை தங்களுடைய கௌரவ சின்னங்களாகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தப் பசுக்களை பாதுகாப்பதற்காக, பழங்குடியின மக்கள் ஆயுதங்களை வைத்துள்ளனர். குறிப்பாக, பசுக்களைப் பாதுகாப்பதில் இயந்திர துப்பாக்கிகளைக் கொண்ட காவலர்கள் பணிக்கு நிறுத்தப்படுகிறார்கள்.

அங்கு, மாடுகளின் சிறுநீர், குளிப்பதற்கு மட்டுமின்றி, வீடுகளில் தெளிப்பதற்கும், பல் துலக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

பசுக்களின் சிறுநீரில் உள்ள அம்மோனியா, பழங்குடியின மக்களின் தலை முடியை ஆரஞ்சு நிறமாக மாற்றியுள்ளது. முண்டாரி பழங்குடி மக்கள் பயன்படுத்தும் அன்கோல் வதுசி என்ற மாடுகள், இறைச்சிக்காக மிகக் குறைந்த எண்ணிக்கையில் கொல்லப்படுகின்றன. இதற்கு, அதன் விலை அதிகமாக இருப்பது முக்கிய காரணமாகும்.

பழங்குடியின மக்களிடையே நடக்கும் திருமணங்களின் போது, வரதட்சணைப் பொருளாக, இந்த அன்கோல் வதுசி இன மாடுகள் வழங்கப்படுகின்றன.

### இந்த பீச்சில் கற்களைப் பொறுக்கினால், 2 லட்சம் அபராதம்!

உலகம் முழுவதும் ஏராளமான கடற்கரைகள் உள்ளன. பொதுவாக பெரும்பாலான மக்களுக்கு, கடற்கரைகள் மிகவும் பிடித்த இடமாக உள்ளன. பொழுதுபோக்கிற்காக மட்டுமன்றி, மன அமைதி, தனிமை என, ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்திற்காக கடற்கரைக்குச் செல்கின்றனர்.

அவ்வாறு செல்லும் பொதுமக்களில் சிலர், கடற்கரையில் கிடக்கும் சங்குகளையோ, கூழாங்கற்களையோ உடன் எடுத்துச் செல்வது வழக்கம். ஆனால், ஒரு கடற்கரையில் மட்டும், கூழாங்கல்லைப் பொறுக்கி எடுத்துச் சென்றால், 2 லட்சம் அபராதம் விதிக்கப்படுகிறது.

நியூயோர்க் போஸ்ட் தகவலின்படி, கேனரி தீவுகளில் உள்ள லான்சரோட் மற்றும் ஃபுயர்டெவென்ச்சுரா கடற்கரைகளில் தான், இந்த அபராதம் விதிக்கப்படுகிறது.

ஆண்டுதோறும் கோடைக்காலத்தில் ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வருகின்றனர். தொலைதூர நாடுகளில் இருந்து சுற்றுலாவிற்கு வரும் சிலர், இந்தக் கடற்கரைகளில் இருந்து, கூழாங்கற்கள் மற்றும் மணலை எடுத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

இதனால் அந்த தீவில், கூழாங்கல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, தீவின் அழகும் பாதிக்கப் படுகிறது. சுற்றுலா பயணிகளின் இந்தச் செயல், தீவின் சுற்றுச்சூழல் அமைப்பையும் பாதிப்பதாகக் கருதி, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும், லான்சரோட் தீவின் கடற்கரைகளில் இருந்து, ஒரு டன் கற்களை சுற்றுலாப் பயணிகள் எடுத்துச் செல்வதாக அதிகாரிகள் கூறுகின்றனர். இவ்வாறு பலமுறை சுற்றுலா பயணிகளிடமிருந்து கற்கள் மற்றும் மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. ஆனால், அபராதம் விதிக்கப்பட்டதில்லை.

இந்நிலையில், தற்போது முதன்முறையாக இந்த அபராத நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்போது, கடற்கரைகளில் இருந்து கற்கள் மற்றும் மணலை, சுற்றுலாப் பயணிகள் எடுத்துச் செல்ல நினைத்தால், அவர்களுக்கு 13,478 ரூபாய் முதல் 2.69 லட்சம் வரை அபராதம் விதிக்கப்படும்.

# 2024 ஏப்ரல் மாத ராசி பலன்கள்

## மேஷம்


இந்த மாதம் பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். வியாபாரத்தில் அதிக லாபம் கிடைக்கும். செவ்வாய் பகவான் லாப ஸ்தானத்தில் சனியோடு பயணம் செய்கிறார். ராசிக்கு ஏழாம் அதிபதியான சுக்கிரன் 12ஆம் வீட்டில் ராகு உடன் இணைந்து சுக்கிரன் உச்சமடைகிறார்.



வீட்டிற்குத் தேவையான ஆடம்பர பொருட்களை வாங்குவீர்கள். ராசிக்கு ஐந்தாம் வீட்டை பார்க்கும் குருவின் கருணையினால் திருமணமான தம்பதியினருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். பெண்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். கேட்ட இடத்தில் இடம் மாறுதல் கிடைக்கும். ஏப்ரல் மாதம் மே‘ ராசிக்காரர்களுக்கு ஏற்றங்கள் நிறைந்த மாதமாக அமைந்துள்ளது.

## ரிஷபம்

எதிர்பாராத சுபச்செலவு ஏற்படும். சிந்தித்து செயல்படுவது நன்மை தரும். பணவரவு இருக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. வீண் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் கணவன், மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது. பிள்ளைகள் மூலம் மனகவலை ஏற்படலாம். குடும்பத்தில் இருப்பவர்களுடன் கலைத்துறையில் உள்ளவர்களுக்கு நன்மையான காலகட்டமாக இருக்கும். எதிர்பார்த்த வாய்ப்புகள் வந்து சேரும். சிலருக்கு நெடுநாளைய ஆசைகள் நிறைவேறும். லட்சியங்கள் கைகூடும். மனதிற்கு நெகிழ்ச்சியன சம்பவங்கள் நடக்கும். நிதானம் தேவை. முன்னேற்றம் ஏற்படப்போவது உறுதி. நல்ல அறிமுகம் கிடைக்கப் பெற்று முன்னேற்றம் உண்டு. கிடைக்கும் வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ள வேண்டும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். தொலை தூர தகவல்கள் நல்ல தகவல்களாக வரும். எதிர்பார்த்த பணம் வரும் வாய்ப்பு உள்ளது. . உங்களது செயல்களுக்கு பாராட்டு கிடைக்கும். மனதில் தைரியம் கூடும்.



## மிதுனம்

சூரியன் ஏப்ரல் மாதத்தில் பத்தாம் வீட்டிலும் ராசிக்கு லாப ஸ்தானத்திலும் பயணம் செய்வதால் பதவி உயர்வு கிடைக்கும், தொழில் உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டாகும். ஏழாம் வீட்டில் சனி, கேது உடன் இணைந்து அமர்ந்துள்ளார். குரு ஏழாம் வீட்டில் இருந்து உங்கள் ராசியை பார்ப்பது சிறப்பான அம்சம். திடீர் அதிர்‘டம் வீடு தேடி வரும். வருமானம் பல வழிகளிலும் வரும். சுக்கிரன் உங்கள் ராசிக்கு பத்தாம் வீட்டில் உச்சம் பெற்று அமர்வதால் பணி செய்யும் இடத்தில் உற்சாகம் கூடும். வேலைக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். வேலை விசயமாக வெளியூர் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். உங்களின் மனதில் பாசிட்டிவ் எனர்ஜி அதிகரிக்கும்.



## கடகம்

சூரியன் உங்கள் ராசிக்கு ஒன்பதாவது வீட்டில் பாக்கிய ஸ்தானத்தில் பயணம் செய்கிறார். அப்பா வழியில் நன்மைகள் நடைபெறும். மாத பிற் பகுதியில் பத்தாம் வீட்டில் திருமண விசயங்கள் கை கூ டி வரும். வீட்டிற்குத் தேவையான ஆடம்பர பொருட்களை வாங்குவீர்கள். கார் வாங்கவும் வாய்ப்பு உள்ளது. வாழ்க்கைத்துணையுடன் காதல் நினைவுகளும் பேச்சுக்களும் அதிகரிக்கும். சுக்கிரன் உங்கள் ராசிக்கு ஒன்பதாவது வீட்டில் பாக்ய ஸ்தானத்தில் உச்சம் பெற்று பயணம் செய்யப்போவதால் உங்களின் நிதிப்பிரச்சினை முடிவுக்கு வரும். நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும். பெண்களுக்கு ஏற்றமும் மாற்றமும் உண்டாகும்.



## சிம்மம்



இந்த மாதம் எல்லாவகையிலும் நன்மை உண்டாகும். அடுத்தவர்களுக்கு உதவுவதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். எதிர்பாலினத்தார-ால் செலவு ஏற்படும். கோபத்தால் சில்லறைச் சண்டைகள் ஏற்படலாம். பணவரத்து கூடும். காரிய அனுகூலம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்தி சாதுர்யத்தால் வேலைகளைத் திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். குழந்தைகளின் செயல்களால் பெருமை அடைவீர்கள். கலைத்துறையினரின் படைப்புகளுக்கு மதிப்பு, மரியாதை கூடும். நல்ல வரவேற்பு கிடைக்கும். உங்களது கலைத்திறன் வளரும். எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும்.

## கன்னி



இந்த மாதம் பணவரத்து திருப்திகரமாக இருக்கும். பலவகையிலும் பிறர் உதவி கிடைக்க பெறுவீர்கள். காரிய தடங்கல்கள் உண்டா-கி நீங்கும். நற்பலன்கள் உண்டாகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். பயணங்கள் சாதகமான பலன் தரும். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். கணவன், மனைவிக் கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்படலாம். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரிடும். பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் மூலம் அலுகூலம் உண்டாகும்.உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். குடும்பத்தில் இருப்பவர்களால் நன்மை உண்டாகும். சந்தோ‘மான நிலை காணப்படும்.

## துலாம்



விபரீத ராஜ யோகம். சுப நிகழ்வுகள் சுப செலவுகளையும் அதிகரிக்கும். தொட்ட தெல்லாம் பொன்னாகும். பல வழிகளில் பணம் வந்து மனதையும் பையையும் நிரப்பும். க'டங்கள், கவலைகள் நீங்கி பொருளாதார நிலைமை சீராகும். வீடு, நிலம், வாகனம் போன்ற சுப விரைய செலவுகள் உண்டாகும்.குலதெய்வத்தின் கருணை முழுவதுமாக கிடைக்கும்.மிகப் பெரிய வாழ்வியல் மாற்றங்களைத் சந்திப்பீர்கள். பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம் பெறும்.ஆன்ம பலம் பெருகும். பிள்ளைகள் வாழ்க்கையில் நல்ல திருப்பு முளையான சம்பவங்கள் நடை பெறும். திடீர் அதிர்‘டம் உங்களை வழி நடத்தும். பூர்வீகம் தொடர்பாக இருந்து வந்த பிரச்சனை-கள் தீர்வுக்கு வர வாய்ப்புண்டு. விட்டு விலகிய சொந்தங்கள் உங்களை புரிந்து கொண்டு நாடி வந்து பேசுவார்கள். மனம் மகிழும் சம்பவங்கள் நடைபெறும். வீடு அல்லது அலுவலகம் தொடர்பான இடமாற்றம் ஏற்படும்.தொழில் முன்னேற்றத்திற்கு கடன் தேவைப்படுபவர்களுக்கு புதிய கடன் கிடைக்கும்.வேலை இல்லாதவர்களுக்கு நல்ல வேலை கிடைக்கும்.

## விருச்சிகம்



,மனோதைரியம் அதிகரிக்கும். எல்லா காரியங்களும் சாதகமாக நடந்து முடியும். எல்லா இடங்களிலும் மரியாதையும், கவுரவமும் அதிகரிக்கும். எல்லா தரப்பினரிடம் இருந்தும் ஆதரவு கிடைக்கும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் தலைநிமிர்ந்து நடப்பீர்கள். எப்போதும் பரபரப்பாக காணப் படுவீர்கள். எதிர்ப்புகள் விலகும். பணவரத்து அதிகரிக்கும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். ஆடை ஆபரண சேர்க்கை இருக்கும். காரிய தடை, வீண் அலைச்சல் ஏற்படலாம். கெட்ட கனவுகள் வரலாம். திடீர் கோபம் ஏற்படும். எதிர்பாலினத்தாரிடம் கவனமாக பழகுவது அவசியம்.

## தனுசு



இந்த மாதம் பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். குடும்பத்தில் சகஜநிலை காணப்படும். இந்த மாதம் மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாகச் செய்ய முடியும். தொழில் வியாபாரத்தில் இருந்த பணத் தட்டுப்பாடு நீங்கும். வசூலாக வேண்டிய கடன்பாக்கிகள் வசூலாகும். வியாபாரம் தொடர்பான பயணங்களால் லாபம் கிடைக்கப் பெறுவீர்கள். அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது. பிள்ளைகளிடம் கனிவாக நடந்து கொள்வது நல்லது. இழுபறியாக இருந்த காரியங்கள் சாதகமாக முடியும். கவுரவம் உயரும். மற்றவர்களிடம் நன்மதிப்பு உண்டாகும். பிற்பகுதியில் சூரியன் 5ஆம் வீட்டில் உச்சம் பெற்று அமரப்போகிறார். சிலருக்கு புதிய வேலையும் இட மாற்றமும் கிடைக்கும். சிலருக்கு உயர் பதவி கிடைக்கும். வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும்.

## மகரம்

,இந்த மாதம் மனகுழப்பம் நீங்கி தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். ஆக்கபூர்வமான யோசனைகள் தோன்றும். ஆனால் மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கவுரவம் அந்தஸ்து அதிகரிக்கும். மற்றவர்களின் நலனுக்காக தன் நலனை பாராமல் உழைப்பீர்கள். எதிர் பார்த்த படி காரியங்கள் நடந்து முடியாமல் காரிய தாமதம் உண்டாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். வீண் வாக்கு வாதத்தால் பகை உண்டாகலாம். பயணத்தில் தடங்கல், வீண் செலவு போன்றவை ஏற்படும். எனினும் நன்மைகள் உண்டாகும். பணவரத்து இருக்கும். வாகன யோகம் உண்டு. பெரியோர்களின் உதவி கிடைக்கும். மனதில் தைரியம் உண்டாகும்.



## கும்பம்



உங்களுக்கு அற்புதமான மாதம். வெற்றி மீது வெற்றி வந்து என்னைச் சேரும் என்று பாடுவீர்கள், வீடு வாங்கும் யோகம் கைகூடி வரப்போகிறது. வண்டி வாகனம் வாங்க யோகம் தேடி வரும். குரு பகவான் பார்வை உங்கள் ராசிக்கு ஏழாம் வீட்டின் மீது விழுவதால் திருமணம் நடைபெறுவதில் இருந்த தடைகள் நீங்கும். வெளிநாடு செல்லும் யோகம் கைகூடி வரும். சுக்கிரன் உங்கள் ராசிக்கு இரண்டாம் வீட்டில் உச்சம் பெற்று அமர்வதால் முகப்பொலிவு கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் உண்டாகும். இது நன்மை தரும் மாதம்.

## மீனம்



இந்த மாதம் சில சிறப்பான பலன்கள் கிடைக்கும் என்றாலும் சவால்கள் பலவற்றை சந்திக்கவும் நேரும் காலக் கட்டமாக அமையும். என்றாலும் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் நிதானமான நீடித்த வளர்ச்சி காணப்படும். குடும்ப வாழ்க்கை சிறப்பாக இருக்கும். சிறு உடல் உபாதைகள் வந்து போகும். இந்த மாதம் உங்களுக்கு பண வரவு சிறப்பாக இருக்கும் என்றாலும் சில தடைகள் மற்றும் தாமதங்கள் காணப்படும். நீங்கள் வேலைக்கு செல்பவர் என்றால் பணியிடத்தில் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள். நல்ல பெயரும் புகழும் பெறுவீர்கள். தொழில் செய்பவர்கள் சிறப்பாக பணியாற்றுவார்கள். உடன் பிறந்தவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். மாணவர்களுக்கு கல்வி கற்க இது சிறந்த நேரம். . குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், மற்றும் வழிகாட்டிகளின் ஆதரவை நீங்கள் பெறுவீர்கள்.

## டாட்டூ போடப் போகிறீர்களா... எச்சரிக்கை!

-பாப்பனப்பட்டு வ.முருகன்

டாட்டூ போடுவது என்பது, இன்றைய இளைஞர்கள், யுவதிகள் மத்தியில், மிகுந்த பேஷனாகி வருகிறது. எந்த அளவுக்கு அழகும் பேஷனும் டாட்டூவில் நிறைந்துள்ளதோ, அந்த அளவுக்கு ஆபத்தும் அதில் இருக்கத்தான் செய்கிறது என்கிறார்கள் சரும நிபுணர்கள். ஏனெனில், நீங்கள் பச்சைக் குத்துவதால், பலவித நோய்த் தொற்றுக்களுக்கு ஆளாகக் கூடுமாம்.

அவற்றில் பயன்படுத்தும் மை மற்றும் ஊசி வழியாக, பல வித நோய்த் தொற்றுக்கள் ஏற்படலாம் என எச்சரிக்கிறது, உணவு மற்றும் மருந்து நிர்வாக வாரியம்.

டாட்டூ போடுவதால், எந்த மாதிரியான பிரச்னைகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்பதைப் பற்றி, இங்கே காண்போம்.

டாட்டூ போடுவது என்பது, நம்முடைய சருமத்தின் மேல் தோலில், வினாடிக்கு 10 முறை ஊசிகளால் துளையிடுவதைக் குறிக்கிறது.

தோலின் மேற்பரப்பிற்கு கீழே, 1.5 முதல் 2 மில்லிமீட்டர் ஆழத்தில், மை வைப்பது அடங்கும். எனவே, டாட்டூ போடும் போது அசுத்தமான மையை பயன் படுத்தினால், தீவிரமான தொற்றுக்கள் மற்றும் கடுமையான காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

அசுத்தபான மை தோலினுள் செல்வதால், நோய்க்கிருமிகள் உட்சென்று, நம்முடைய ரத்தம் மற்றும் நிணநீர் அமைப்புகள் வழியாக உள்ளுறுப்புகளில் சென்று பாதிப்புகளை ஏற்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

டாட்டூ போடுவது பிரபலமடைந்து வருவதால், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைக-ளை பின்பற்ற வேண்டியது மிகவும் அவசியம்.

2019ம் ஆண்டு வாக்கெடுப்பின்படி, 30 சதவிகிதம் அமெரிக்கர்கள், குறைந்த பட்சம் ஒரு முறையாவது டாட்டூ குத்தியுள்ளனர். இது, 2012ம் ஆண்டில் 21 சதவிகிதமாகவே ஆக இருந்தது.

18-34 வயதுடையவர்களில் 40 சதவிகிதம் பேரும், 35-54 வயதுடையவர்க-ளில் 36 சதவிகிதம் பேரும் குறைந்தது, ஒரு தடவையாவது டாட்டூ போட்டு உள்ளனர்.

மக்களுக்கு டாட்டூ போடுவதில் இருக்கும் ஆர்வம், அதை எப்படி பாதுகாப்பாக செய்ய வேண்டும் என்பது பற்றி இல்லவே இல்லை.

டாட்டூ போடும் போது நோய்க்கிருமி-கள் உள் செல்வதால், சொறி, கொப்புளங்கள், வலிமிகுந்த கொப்புளங்கள் மற்றும் கடுமையான புண்கள் போன்றவை ஏற்படுகின்றன.

டாட்டூ போடுவதற்குப் பயன்படுத்தும் அசுத்தமான மையில், காசநோய் அல்லாத மைக்கோபாக்டீரியாக்கள் காணப்படு கின்றன. இந்த பாக்டீரியாக்கள், மண்ணிலும் நீரிலும் காணப்படுகின்றன. இவை சருமத்தினுள் செல்லும் போது, ஏராளமான சரும பிரச்னைகள் ஏற்படுகின்றன.

டாட்டூ மைகளை மிகுந்த பாதுகாப்புடன், சுத்தமாக வைத்திருப்பது அவசியம். டாட்டூ மை-களை தயாரிக்கும் மற்றும் பேக்கிங் செய்யும் விதங்கள், தரமானதாக இருக்க வேண்டும்.

டாட்டூ போடும் போது பயன்படுத்-தப்படும் மையை, அப்படியே திறந்த வெளியில் வைக்கக் கூடாது. மையை மூடி வைக்க வேண்டும். திறந்து வைத்-தாலும் தொற்றுக்கள் உண்டாக வாய்ப்புள்ளது.

டாட்டூ மை தயாரிக்கப் பயன் படுத்தும் பாத்திரங்கள் மற்றும் அதை கிளறுவதற்குப் பயன்படுத்தும் கரண்டிகள், மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும்.

டாட்டூ போடுபவர், பொருத்தமான உடைகள், கை-யுறைகள், மாஸ்க்குகளை அணிந்திருக்க வேண்டும்.

நோய்த் தொற்றுகள் பெரும்பாலும் தோலில் ஊடுருவி, பெரிய சிவப்பு கொப்புளங்கள், கட்டிகள், மெல்லிய சீரற்ற கோடுகளை உருவாக்கும்.

மே, 2019ம் ஆண்டு விதிமுறைப்படி, நுண்ணுயிர்களால் அசுத்தமான டாட்டூ மைகளை பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். நுகர்வோர் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு, இது குறித்து உணவு மற்றும் மருந்து நிர்வாக வாரியம், பாதுகாப்பு எச்சரிக்கையினை வழங்கியுள்ளது.

புகழ்பெற்ற மை உற்பத்தியாளர்கள், காமா கதிர்வீச்சு எனப்படும் செயல்முறையை பயன்படுத்துகின்றனர். இந்தக் கதிர்வீச்சு முறை, நுண்ணுயிர்களைக் கொல்ல உதவுகிறது.

கடந்த ஆண்டுகளில், ஹெபடைடிஸ் மற்றும் எச்.ஐ.வி., பரவும் அசுத்த ஊசிகள், டாட்டூ போடுவதில் அச்சத்தை ஏற்படுத்தியது. ஆனால், தற்போது அந்த மாதிரியான பிரச்னைகள் இப்போது இருப்பதில்லை.

டாட்டூவை அழிக்க, அறுவை சிகிச்சை முறை தேவைப்படுகிறது. ஆனால், அறுவை சிக-ிச்சை வடுவுடன், நீங்கள் நீண்ட காலம் இருக்க வேண்டியிருக்கும் என்கிறார்கள் நிபுணர்கள். எனவே, டாட்டூ போடுவதற்கு முன்பு, பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பது நல்லது.

சிறுகதை

# வினை விதைத்தவன்!

-ஆதித்தன்

கனகராஜ், டிவியை அசுவராஸ்யமாக பார்த்துக் கொண்டிருந்தார்.

பிரேக்கிங் நியூஸ் என்ற தலைப்பில் ஓடிய திடீர் செய்தியைப் பார்த்து அதிர்ந்தவர், உடனே தலைமைக் கழகத்திற்கு போன் செய்தார்.

போனை எடுத்த பெரியசாமி, ”நியூஸ் பாத்தியா?” என்றார்.

”இப்பத்தான். இளஞ்செழியன் ஹார்ட் அட்டாக்ல இறந்துட்டாராமே?”

”அவரு, உங்க மாவட்டச் செயலாளர் தானேய்யா? நீ என்னைக் கேக்கற? அனேகமா கட்சியில அந்த போஸ்ட் உனக்குத் தான் கிடைக்கும்னு பேசிக்கறாங்க. சூதானமா காய் நகர்த்து. அந்த ரங்கசாமி தான் உனக்குப் போட்டியே. அவன் குறுக்கே பூந்து ஆட்டய கலைச்சிடப் போறான். டச்சுலயே இரு. நிலவரத்தை அப்பப்போ சொல்றேன்...” என்றார், பெரியசாமி.

”உங்களை நம்பித்தான் இருக்கேன். பாத்து பண்ணுங்க...” என்றார், கனகராஜ்.

”நீ நம்மாளுய்யா. உனக்கு செய்யாம, யாருக்கு செய்யப் போறேன்? உனக்கு சப்போர்ட் பண்ணி தலைவர்கிட்ட பேசறேன். தலைவர் தான் முடிவு எடுக்கனும்...” என்றார், பெரியசாமி.

”நல்லதுங்க. நன்றி!“ - கனகராஜ் போனை வைத்துவிட்டு, யோசனையில் ஆழ்ந்தார்.

மாவட்டச் செயலாளர் பதவி என்பது, கலெக்டர் பதவிக்கு நிகரானது. கட்சித் தலைவரே மா.செ.,வின் அனுமதி பெற்றுத் தான் மாவட்டத்திற்குள் நுழைய முடியும். பணம் கொட்டும் வளமான பதவி. இந்தப் பதவி மட்டும் கிடைத்துவிட்டால், பல தலைமுறைக்கு சொத்து சேர்த்து விடலாம். இதெல்லாம் நிறைவேற, அந்த ரங்கசாமி குறுக்கே வராமல் இருக்க வேண்டும். கனகராஜ், குலதெய்வ கோவில்




பூசாரியிடம் சொல்லி, கிடாவெட்டச் சொன்னார். வெள்ளை சிவப்பு என்று பூப்போட்டு பார்த்து திருப்தியானார். பதவி கிடைத்தால் பழனியில் மொட்டை அடிப்பதாக வேண்டிக் கொண்டார்.

அவரது வேண்டுதல் பலிக்கவில்லை. அவர் அடித்த போனை எடுத்த போது, மறுமுனையில் இருந்த பெரியசாமி, கத்தித் தீர்த்தார்.

”என்னய்யா பண்ணிட்டு இருக்க? கோயில் கோயிலா சுத்துனா வேலை நடக்குமா? லாபி பண்ண வேணாமா? பாரு, அந்த ரங்கசாமி, கிச்சன் கேபினட்டைப் பிடிச்சு, தலைவர் மனைவியையும், பொண்ணையும் கையில் போட்டுக்கிட்டு, பதவியை வாங்கிட்டான். நாளைக்கு தலைவர், அவன் பேரைத் தான் அறிவிக்க போறாரு...”

”வேற வழியே இல்லைங்களா?”

”பேசாம அவனைப் போட்டுத் தள்ளிடு. லிஸ்ட்டுல அவனுக்கு அடுத்தது, நீதான் இருக்க...”

”கோபமா இருப்பீங்க போல. நான் அப்புறமா பேசறேன்...” - போனை வைத்தவர், உடனே ரங்கசாமிக்கு போன் செய்தார்.

”வாழ்த்துக்கள் ரங்கசாமி. நீங்க தான் அடுத்த மாவட்டச் செயலாளர். இப்பத் தான் தலைமை கழகத்திலிருந்து போன் செய்து சேதி சொன்னாங்க...”

"அண்ணே! ரொம்ப நன்றிண்ணே! உங்களுடைய ஒத்துழைப்பு எனக்கு வேணும்ணே..."

"கண்டிப்பா. நீ என் தம்பி மாதிரிப்பா. பணி சிறக்க வாழ்த்துகள்..." என்று போனை வைத்தவர், பல்லைக் கடித்தார்.

யாருக்கோ போன் செய்தவர், காத்திருந்தார். சிறிது நேரத்தில் காரில் வந்து இறங்கியவன், "சொல்லுங்க தலைவரே... நான் என்ன செய்யணும்?" என்றான்.

"சண்முகம். உனக்கு ஒரு வேலை வந்திருச்சு. எனக்குக் கிடைக்க வேண்டிய பதவி, வேற ஒருத்தனுக்குப் போயிருச்சு. அவனை காலி பண்ணாத்தான், அந்தப் பதவி எனக்கு கிடைக்கும். நீதான் விபத்து மாதிரி ஆளைக் காலி பண்றதுல கில்லியாச்சே? ஏதாவது பண்ணு..."

"அந்த ரங்கசாமியத் தானே சொல்றீங்க? அவனுக்கு மா.செ., பதவி கிடைச்சதுல, எனக்கே அதிர்ச்சி தான். அவனுக்கு ஒரு பாராட்டு விழா ஏற்பாடு பண்ணுங்க. அதுலயே அவனுக்கு பாடையக் கட்டிடலாம்..."

" எப்படி?"

"பாராட்டு விழான்னு, ஒரு லட்சம் பலூனைப் பறக்கவிடுறோம் தலைவரே!"

"பலூனா?"

"ஆமா தலைவரே! எல்லா பலூன்லயும், ஹைட்ரஜன் கேஸுக்குப் பதிலா, ஹீலியம் கேஸை நிரப்புறோம். சூரியன்ல இருப்பது ஹீலியம் வாயு தான். எல்லா பலூன்லயும் ஹீலியத்தை நிரப்பி, அதை ஒரு வலையில் மூடி வைச்சிருவோம். அதுல ஒரு பலூன்ல, ஆட்டோமெட்டிக் டைமரை செட் பண்ணி, சின்னதா வெடிக்க வச்சா போதும். மொத்த பலூன்களும் வெடிச்சு சிதறும் போது, மூணு நாலு சிலிண்டர்கள் வெடிச்ச பாதிப்பு உண்டாகும். ரங்கசாமி மட்டுமல்ல, இன்னும் பல பேரு சேர்ந்து சாவாங்க..."

"எத்தனை பேர் செத்தா எனக்கென்ன? ஏற்பாடு பண்ணு..."

"நீங்க கவனமா இருங்க. பலூன் வெடிக்கும் முன்பாகவே, வெளியே போயிருங்க..."

" நான் பாத்துக்கிறேன்..."

அவன் வெளியேறினான்.

தனக்குப் பாராட்டு விழா நடத்தும் கனகராஜின் பெருந்தன்மையில், கண்களில் ஜலம் வைத்தான் ரங்கசாமி.

ஒரு லட்சம் பலூன் என்னும் கான்செப்டே, அவனுக்குப் புதிதாக இருந்ததால், தலையை ஆட்டிவிட்டான்.

விழா மேடையில், அவனுக்கு மாலை போட்டு, புகழ்ந்து பேசிய கனகராஜ், "அவசரமா ஒரு வேலை இருக்குப்பா..." என்று நழுவினார்.

"அண்ணே! எங்கே கிளம்பிட்டீங்க? மழை வர்ற மாதிரி இருக்கு. இருங்க போகலாம்..." என்ற ரங்கசாமியிடம், "கார்ல தானே போறேன்..." என்று விடைபெற்றார் .போகும்போது, கூட்டத்தில் இருந்த சண்முகத்திடம் கண்களைக் காட்டினார்.

அவன், ரிமோட் கண்ட்ரோல் இருந்த கையின் கட்டை விரலை உயர்த்திக் காட்டினான்.அவரது கார் பத்தடி தூரம் நகர்ந்த பின்பு, பேய்மழை பெய்யத் துவங்கியது.

"மழை காரியத்தை கெடுத்துரும் போலிருக்கே. டிரைவர் கொஞ்சம் வேகமா போப்பா..." என்றார்.

டிரைவர் வைப்ரேட்டரை ஆன் செய்து, ஆக்சிலேட்டரை மிதித்தான். அவரது போன் ஒலித்தது. சண்முகம் பேசினான்.

"தலைவரே... பிளான் பெயிலியர். பறக்கவிட்ட அத்தனை பலூனும், மழையால மேலே போகவேயில்லை. மழையில நனைஞ்சதால, டைமரும் வேலை செய்யலை..."

"போடாங். போனை வை..."

அவரது கார், பாலத்தில் ஏறி இறங்கிய போது, வானத்திற்கும் பூமிக்குமாக அல்லாடி மழையில் நனைந்த பலூன் கூட்டம் ஒன்று, அவர் கார் கண்ணாடி மீது மோதியது. அதில் சில பலூன்கள் வைப்ரேட்டரில் சிக்கி பாதையை மறைக்க, டிரைவர் தடுமாறி ஸ்டீரியங்கை வளைக்க, எதிரே வந்த லாரி, திடீரென்று பாதை மாறிய காரால் குழம்பி, கடைசி நேரத்தில் பிரேக்கை மிதித்து, டயர்கள் தேய, கார் மீது மோதி நின்றது.

லாரி டிரைவர் விபரீதம் புரிந்து, எட்டி குதித்து ஓட ஆரம்பித்தான்.

கார் டிரைவர், நெஞ்சை அணைத்த ஏர் பலூனிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, பின்கதவைத் திறந்தான்.

"அய்யா..."

தலையில் அடிபட்டிருந்த கனகராஜ், பிணமாக சரிந்தார்.

"இந்த பலூன், என்னைக் காப்பாத்திருச்சு. அந்த பலூன், அய்யாவைக் கொன்னுருச்சு..."

அழுகையுடன் சொல்லிக் கொண்டிருந்தான், டிரைவர்.

**ஜெ. தீபலட்சுமி எழுதிய "இப்போதும் வசந்தி பேக்கரியில் பெண்கள் காணப்படுவதில்லை" என்கிற புத்தகம் எழுத்தாளரின் முதல் அபுனைவு நூலாகும். இதில் மொத்தம் 22 கட்டுரைகள் பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்டிருக்கி-ன்றன. தலைப்புக்கள் வெவ்வேறாக இருந்தாலும் உள்ளடக்கம் ஒன்றுதான். அது பெண் உரிமை மற்றும் பெண் சுதந்திரம் குறித்து வெவ்வேறு அளவுகளில் பேசுகிறது.**

பெண்ணியம் குறித்து பேசுவதால் உலக அளவில் முன்னோடியான பிரபலமான எழுத்தாளர்களின் பெயரையோ, புத்தகத்தின் பெயரையோ அல்லது அதிலிருந்து மேற்கோள்கள் காட்டியோ தனது வாசிப்பு விஸ்தீரனத்தை வெளிக்காட்டியோ நம்மை பயமுறுத்தவில்லை என்பது நமக்கான ஆறுதல் .

ஒரு தத்துவத்தை ஒரு கோட்பாட்டை நாம் முழுமையாக புரிந்து கொண்டோம் என்பதற்கான எளிய உதாரணம் நாம் நம்முடைய அன்றாட வாழ்வில் நிகழ்வில் அவற்றைப் பொருத்திப் பார்த்து அதன் சரி தவறுகளை புரிந்து கொள்வது தான். தத்துவம் வெறும் பேச்சு அளவில் நிற்காமல் அது செயலில் நிகழும் போது தான் முழுமை பெறும்.

ஜெ. தீபலட்சுமி அப்படித்தான் தன்னை சுற்றி நிகழும் சிறு சிறு செயல்களில் இருக்கும் பெண் அடிமைத்தனத்தை பெண்ணுக்கு மறுக்கப்படும் உரிமையை சமத்துவத்தை கண்டடைந்து அதை எளிமையாக எழுதிச் செல்கிறார். புரட்சி என்பது மிக பிரம்மாண்டமானது அல்ல. அது உள்ளுக்குள் நிகழ்ந்து ஒட்டுமொத்த சமூகத்தில் நிகழ்வது. பலருக்கு ஒட்டுமொத்த சமூகத்தில் மாற்றம் நிகழ்ந்த பின்னே உள்ளுக்குள் நிகழும். சிந்தனையாளர்களும் எழுத்தாளர்களும் முதல் வகை

.இரண்டாம் பாலினமான பெண்களுக்கு மதத்தின் பெயரால் ஜாதியின் பெயரால் சமூகத்தின் பெயரால் குடும்பத்தின் பெயரால் பண்பாட்டின் பெயரால் எப்படியெல்லாம் உரிமையும் சமத்துவமும் மற்றும் சுதந்திரமும் மறுக்கப்படுகிறது, எப்படி அவர்களை அடக்கி ஒடுக்குகிறது என்பதை அனைத்து கட்டுரைகளிலும் எழுதிச்



செல்கிறார். நிறத்தின் காரணமாக ஒதுக்கப்படுவதையும் உடையில் பாரபட்சமாக நடத்தப்படுவதையும் சுட்டிக் காட்டுகிறார். ஆணாதிக்கம் எப்படி பெண்களை நைச்சியமாக பேசி தங்கள் கருத்துக்களை ஏற்க வைத்து அடிமைப்படுத்துகின்றன என்பதை அழகாக வெளிப்படுத்துகிறார் .

உத்தியோகம் யார் இலட்சணம்? மற்றும் யாருக்கும் நேரக்கூடாது என்று இரண்டு கட்டுரைகள் மிக காத்திரமாக எழுதப்பட்டிருக்கிறது. காரணம் இது கால காலமாக பொது வெளியில் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வரும் கொ-டுமையை பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறையை பற்றியதாகும். சிறு வயதில் ஒரு பெண்ணிற்கு நிகழும் பாலியல் வன்கொடுமையை அந்தப் பெண்ணால் தன் வாழ்நாளெல்லாம் மறக்க இயலாது என்பதை முழுமையாக உணர்ந்து இருக்கிறார்.அதனால் தான் மற்ற கட்டுரைகளில் நகைச்சுவையும் நக்கலும் இருக்க இந்த இரு கட்டுரைகளிலும் ஆக்ரோ'மாக ஆவேசமாக அனல் பறக்க எழுதி இருக்கிறார்.

பெண்கள் தங்களுக்கான உரிமையை சமத்துவத்தை பேசிப்பேசி எழுதி எழுதி போராடிப் பெற முடியும் என்கிற நிலையில் இவர்கள் இது போல் தொடர்ந்து எழுத வேண்டும். இவரின் மொழி நடையும் குறிப்பிடத்தக்கது. பனிப் பாறையில் விழுந்த பாதரசத் துளி போல மனதுக்குள் வழுக்கிச் செல்கிறது. இதை அடுத்து இரண்டு புத்தகங்கள் எழுதியிருக்கிறார் என்பது கூடுதல் மகிழ்ச்சி. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுத் தர வேண்டுமா? தேவையில்லை பரிணாமத்தில் இந்த மீன் குஞ்சு பறவையாக மாறி வானில் பறந்து கொண்டிருக்கிறது. வாழ்த்துக்கள்.

வேலு சுப்பிரமணியம்


கோப்ஸ் சிலம்பம் பயிற்சி மையம்
கற்றுக் கொடுக்கப்படும் சிலம்பத்தின் பயிற்சி முறைகள்
ஒற்றைக் கம்பு
இரட்டைக் கம்பு
சுருள் வாள்
செடிக் குச்சி
மான் கொம்பு
வேல் கம்பு
தீச் சிலம்பம்
அலங்கார சிலம்பம்
தலைமை மகாகுரு
Dr.A.M.GOPALAN
இடம்: வைகை மஹால், பழைய வண்ணாரப்பேட்டை
Contact: 9841378996 | 7358339842

# அச்சாரம்

ACCHARAM

பல்சுவை மாத இதழ்

Tamil Monthly

வ.எண். ______

## பத்திரிகை சந்தாதாரர் படிவம்

Passport Size Photo

பெயர்____________________ த.பெ.____________________

நிரந்தர முகவரி________________________________________

________________________________________

பாலினம்____________ தொழில்____________________

ஆசிரியர் அவர்களுக்கு, நான் மேற்காணும் விலாசத்தில் வசித்து வருகிறேன். தங்களின் அச்சாரம் பத்திரிகைக்கு **(ஆயுள்/ஆண்டு)** // சந்தாதாரராக / நன்கொடையாளராக விரும்புகிறேன். கீழ்காணும் முகவரியில் எனக்கு பத்திரிகையை அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

| சந்தா கட்டண விபரம் | | | ✔ |
|---|---|---|---|
| **ஆயுள் சந்தா** | – | **ரூ.5,000/–** | |
| **பத்தாண்டு சந்தா** | – | **ரூ.2,500/–** | |
| **ஆண்டு சந்தா** | – | **ரூ.250/–** | |
| **நன்கொடை** | – | **ரூ.** | |

**பத்திரிகை அனுப்ப வேண்டிய முகவரி**

திரு/திருமதி________________________________________

________________________________________

________________________________________

________________________________________

தொலைபேசி எண்______________ கைப்பேசி____________ இ.மெயில்____________

நாள்:

இடம்: சந்தாதாரர் கையொப்பம்

படிவம் மற்றும் சந்தா கட்டணத்தை ஆசிரியர், அச்சாரம், எண்.11/6ஏ, குமரன் காலனி 3வது தெரு, வடபழனி, சென்னை–600026 என்கிற முகவரிக்கு அனுப்பவும். டிடி அல்லது காசோலைகளை அச்சாரம் என்கிற பெயரில் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம். சந்தாதாரர்களுக்கு பின்னர் பணப்பற்று ரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

**வங்கி கணக்கு விவரம்:**

**ACCHARAM - Current Account**

**Acc.No: 6565766161**

**Indian Bank, Saligramam Branch**

**IFS Code: IDIB000S082**

# உலக சினிமா

- முத்து நாகப்பன்

மஞ்சும்மேல் பாய்ஸ் இன்று நாம் எல்லோரும் இந்த படத்தை கொண்டாடிக்கொண்டிறிக்குறோம். ஆனால் இதை விட பல மடங்கு மனித உயிரின் முக்கியத்துவத்தையும், மனித ஆற்றலின் மகத்துவத்தையும் மனதிற்கு நெருக்கமாக உணர்த்திய சமீபத்திய சர்வைவல் த்ரில்லர் படங்களில் மிக முக்கியமான படம் Thirteen Lives அதைப்போலவே 1972 ஆம் ஆண்டு தென் அமெரிக்காவின் ஆண்டிஸ் மலைத்தொடர் பகுதியில் நடந்த ஒரு பயங்கரமான விமான விபத்தில், உறைந்து போகக்கூடிய கொடூரமான பனியில், உயிர் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் எதுவுமே இல்லாத பனி படர்ந்த பள்ளத்தாக்கில், உணவின்றி சிக்கித் தவித்த மனிதர்கள் உயிர் பிழைப்பதற்காகவும், உயிர் வாழ்வதற்காகவும் மேற்கொள்ளும் அசாத்தியமான போராட்டங்களை விவரிக்கும் ஒரு அற்புதமான சர்வைவல் த்ரில்லராக மனதை உறைய வைக்கிறது இந்த ஸ்பானிஷ்“ நாட்டுப் படமான society Of The Snow

□சொசைட்டி ஆப் தி ஸ்னோ” (நெட்ப்ளிக்ஸ்) இந்த வருட ஆஸ்கார் விருதிற்கான சிறந்த வெளிநாட்டுப் படங்கள் பிரிவில் தேர்வாகியிருக்கும் இப்படம் சமீபத்தில் நெட்ஃப்ளிக்ஸில் வெளியாகி இருக்கிறது. உருகுவே நாட்டில் இருந்து சிலி நாட்டிற்கு விமானத்தில் புறப்பட இருக்கும் ரக்பி விளையாட்டு வீரர்கள், அவர்களின் குடும்பம் மற்றும் வழியனுப்ப வரும் அவர்களின் உறவினர்களுடன் விமானத்தில் பயணித்த நூமா என்ற இளைஞனின் குரலில் ஆரம்பிக்கிறது படம். படம் துவங்கிய பத்தே நிமிடங்களில் விரியும் அந்த பயங்கரமான விமான விபத்து நமக்குள் ஒரு பேரதிர்வை ஏற்படுத்தி நிலைகுலைய வைக்கிறது. பயணித்த 45 பேரில் இறந்தவர்கள் போக உயிர் பிழைத்தவர்கள் அந்த உறையும் குளிரில், உணவின்றி, உயிர்



வாழ்வதற்கான எந்தச் சூழலுமே இல்லாத நிலையில், இறந்தவர்களின் சடலங்களையே உணவாக உட்கொள்ள வேண்டிய கொடூரமான அவலத்தையும், ஒவ்வொரு நாளும் உயிர் பிழைப்பதற்காக அவர்கள் எதிர்கொள்ளும் போராட்டங்களையும், எப்படியும் தாங்கள் மீட்கப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள் மேற்கொள்ளும் அசாத்தியமான முயற்சிகளையும் அச்சு அசலாக நம்கண்முன் விவரித்து நம்மையும் நடுங்க வைக்கிறது இப்படம்.1972 ல் நடந்த உண்மைச் சம்பவத்தின் அடிப்படையில் பாப்லோ வெர்சியால் எழுதப்பட்ட சொசைட்டி ஆஃப் தி ஸ்னோவ் புத்தகத்தை மையமாக வைத்து உருவாக்கப்பட்டிருக்கும் இப்படம் மனித உயிரின் மகத்துவத்தைப் படம் நெடுக நமக்குஉணர்த்திக் கொண்டே செல்கிறது. அது மட்டுமின்றி எத்தகைய கொடூரமான சூழலிலும் நம்பிக்கை இழக்காமல் போராடும் மனிதர்களின் திடமான மன உறுதிக்கு ஒரு மிகச்சிறந்த வரலாற்றுச் சான்றாக மிளிர்கிறது. இப்படி ஒரு உன்னதமான படைப்பைக் கொடுத்ததற்காகவே இயக்குனர் மற்றும் குழுவிற்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

படத்தில் நூமா, ராபர்ட்டோ, நான்டோ உட்பட பல கதாபாத்திரங்களில் நடித்த பெரும்பாலான நடிகர்கள் புதுமுகங்கள் என்பது கூடுதல் ஆச்சர்யம். ஒவ்வொருவரும் தங்களுடைய தத்ரூபமான நடிப்பினால் இந்தப்படத்திற்கு உயிரூட்டி

இருக்கின்றனர். உயிர் வாழ்வதற்காக இறந்த சடலங்களை உணவாக்க மார்சிலோவுடன் நண்பர்கள் உரையாடும் காட்சி, நூமாவுடன் எது நம்பிக்கை என்றும்

எது கடவுள் என்றும் ஆர்டுரோ பேசும் காட்சி, காலில் காயம் ஏற்படும் பொழுது தளர்ந்து போகும் நூமாவை சமாதானபடுத்தும் சேவியரின் உரையாடல் காட்சி, பாஞ்சோவும் நூமாவும் உடைந்து அழும் ஒரு காட்சி உட்பட பல காட்சிகள் நமக்குள் ஒருவிதமான அதிர்வை ஏற்படுத்தும் அருமையான காட்சிகள ஆண்டிஸ் மலைப்பகுதியின் பிரமிக்க வைக்கும் ஒளிப்பதிவும், வலியையும் நம்பிக்கையையும் அமைதியாகக் கடத்தும் இசையும், காட்சிகளுக்கான ஒவ்வொரு கதாபாத்திரங்களின் ஒப்பனையும் படத்தின் தொழில்நுட்பங்களில் குறுப்பிடத்தக்க சிறப்பான வி'யங்கள். படத்தின் நீளம் சிலருக்கு ஒரு குறையாக இருக்கலாம் ஆனால் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய ஒரு மிகச் சிறந்த படம் என்பதில் மாற்றுக்கருத்தே இல்லை.

படத்தின் இறுதியில் மீட்கப்பட்ட ஒரு இளை-ஞனைக் கட்டித்தழுவிக் கொண்டு This is a miracle என்கிறாள் அவனின் அம்மா. சக நண்பர்கள் பலரை இழந்திருக்கும் அவன் அதற்கு what miracle? என்கிறான். இறைவன் மீதான நம்பிக்கையை இழக்கும் சூழலிலும், இயற்கையின் இடர்களில் இருந்து தப்பிக்க முடியாத பேராபத்தான நிலையிலும் சக மனிதனுக்காக உயிரைக் கொடுத்து உதவி செய்யும் மனிதத்தன்மை தான் அந்த அற்புதம் என்று அழுத்தமாகப் பதிவு செய்-திருக்கிறது இந்த Society Of The Snow

பி.கு:

இந்த இயக்குனரின் The Impossible படம் பார்த்திருக்கிறேன். 2004 ல் சுனாமியின் கோரத் தாண்டவத்தில் தாய்லாந்து நாட்டில் சிக்கிக்கொண்ட ஒரு குடும்பத்தைப் பற்றிய உண்மைச் சம்பவத்-தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட ஒரு உணர்வுப்பூர்வமான படம் என்பது குறிப்பிடத்தக்கது

புத்தாண்டு..

நாடுகளுக்கிடையே
போர் மூண்டபோது
ஒருவருக்கொருவர்
அரவணைக்க கற்றுக்கொண்டோம்!

கொரொனா
என்ற கொடிய நோய் தாக்கியபோது
சுத்தத்தை
கற்றுக்கொண்டோம்!

விலைவாசி
தாறுமாறாக ஏறியபோது
சிக்கனத்தை
கற்றுக்கொண்டோம்!
வன்முறை
ஆங்காங்கே வெடித்தபோதும்
மனிதம் என்ற பூச்செண்டுகள்
மணம்
வீசிக்கொண்டுதான் இருந்தன!
வறட்சி அதிகமானபோது
சேமிக்கக் கற்றுக்கொண்டோம்
மழைநீர்த்தொட்டி அமைத்து!
புயல் வந்த போது
கரம் கொடுக்க கற்றுக்கொண்டோம்
அழிவிலிருந்து மீட்க!
ஜல்லிக்கட்டு போன்ற நம்
பாரம்பரியம் அழிக்கப்பட்டபோது
போராடவும் கற்றுக்கொண்டோம்!
வருடம் முழுவதும்
சோதனைகள் வந்தாலும்
வாழாமலா விட்டுவிட்டோம்
அதற்குப்பதிலாக
எதையும் சாதிக்க
கற்றும்கொண்டோமே!
மாற்று வழியென்பது
நம் பாதையிலும்..
மாற்று மருந்தென்பது
நம் கைகளிலும் உள்ளபோது
மாறும் நாட்களைப் பற்றி
நமக்கென்ன கவலை..
நெஞ்சை நிமிர்த்தி பூ தூவி
வரவேற்போம்
இனி வரும் புத்தாண்டையும்
இனிதாக.!

கௌந்தி மு
சென்னை.

பார்க்க ரசிக்க

சினிமா படங்கள் குறும்படங்கள் ஆல்பம் பாடல்கள் சினிமா பாடல்கள்

சினிமா ஆடியோ விழாக்கள்

பிரபலங்களின் பேட்டிகள் மற்றும் பல நிகழ்ச்சிகள் காண

அச்சாரம் tv @ SKRN MEDIA (you tube channel)








SKR MEDIA

SUBSCRIBE LIKE SHARE

# கவிதைக் கூடல்

களிம்புக் குரல்!

கோடியில் ஒருத்தியாய்
என்னையும் சுமந்துகொண்டு
ராட்டினமாய் சுற்றுகிறது
இப்பூமி

என்னைக் கழுவுகிறது
வெளிச்சப் பகல்
போர்த்தி உறங்க வைக்கிறது
கருமை இரவு

வாடிக்கையாய்
இவ்வாறு நகரும் வாழ்வில்
கையளவு தானியம் இருந்து
விசிறி எறிந்தால் போதும்
கவலைகளுக்கு களிம்பென
காதுகளை நிறைக்கும்
பட்சிகளின் குரல்.

-தி.சிவசங்கரி, பனையபுரம்

பசலை ஆறு!

ஓரிடத்தில்
ஓர் ஆறு
வறண்டு கிடக்கும்போது
இன்னோரிடத்தில்
மற்றோர் ஆறு
பிராவகித்து
ஓடிக்கொண்டிருக்கிறது

நம் பிரிதலில்
என் துயரையும்
உன் மகிழ்வையும் போல.

-வி.பரணிதா, உளுந்தூர்பேட்டை

ஒற்றை நெற்றி!

பல பொட்டுக்களைத் தாங்கும்
ஒற்றை நெற்றியாகிவிடுகிறது
உன் ஒப்பனையறையில்
நீ முகம்பார்க்கும்
கண்ணாடி.

-எஸ்.அலமேலு, கள்ளக்குறிச்சி

நிதர்சன முரண்!

அந்த கிராமத்தின்
எல்லா சாவு ஊர்வலத்திலும்
புகையும் வறட்டிச் சட்டியை
பாடைக்கு முன்பாக சுமந்து சென்ற
ஊர்த்தொழிலாளியின்
இறுதி ஊர்வலத்தில்
கலந்துகொண்டவர்கள்
இன்னொரு ஊர்த்தொழிலாளியும்
பாடை சுமக்கும்
அவன் சொந்தங்களும் மட்டுமே.

-மு.ஆதினி, சேலம்

அசைவுறு மனம்!

ஒரு பறவையின்
வருகைக்குப் பிறகான
மரக்கிளையின் நிலையில்
சலனமின்றி இருக்கிறேன்
நம் சந்திப்பில்

அப்பறவையின்
புறப்பாட்டிற்குப் பிறகான
அசைவுறுதலுக்கு
மனம் ஆட்படுவதென்னவோ
உன் விடைபெறுதலில் தான்.

-கே.வினோத்குமார், விழுப்புரம்

(தொகுப்பு: பாப்பனப்பட்டு வ.முருகன்)

Owned, Published and Printed by M.C.SEKAR Published from SF1, 2nd Floor, 5/10, Anna Colony, Virugambakkam, Chennai - 600 092. Printed at J.M.PROCESS at 22/49, Subedar hussain Street, Border thottam, Royapettah, Chennai - 600 014. Editor: M.C.SEKAR


SHALOM STUDIOS
JOHN MAX & P.ANTONY DOSS
PROUDLY PRESENTS
ANDREA JEREMIAH
விரைவில்
கா
THE FOREST
WRITTEN & DIRECTED BY NANJIL
PRE-PRODUCTION SASIKALA PRODUCTION
PRODUCED BY JOHN MAX

ACCHARAM, Tamil monthly, April 2024
Date of publication 1st Every Month
Poster at Pathrika channel Egmore

RNI No.TNTAM/2016/69258 R.Dis.No.610/2016
Postal Reg.No.TN/CC(S)DN/559/23-25
Posted between 1-7 April 2024

